## அரசு ஊழியர்

பிப்ரவரி 2017

மலர் : 38 இதழ் : 2

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக வெளியிடுபவர் :
இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ்,
2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை,
சென்னை - 600 015.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


**சூடா ஒரு கோப்பை சூப்**

## வர்லாம் வா...! வர்லாம் வா...!

போராட்ட காலமிது!

ஒன்றிற்கு மேல் குரல்கள்
ஓங்கிக் கேட்டால்
போராட்டம் அதுவென்று
புலன்கள் அறிந்துகொள்ளும்!

மயில்கள் ஆடுவது கூட
ஆர்ப்பாட்டம் என்று
அறியப்படும்!

குயில்கள் கூவுவது கூட
கோரிக்கைக்காகவே
என்று பேசப்படும்!

புல்லுக்கட்டு தேடி கன்றுகுட்டிகள்
ஓடினால் அது கூட
ஜல்லிக்கட்டு போராட்டம் என்று
சொல்லப்படும்!

சிறுத்தைகள் நாமும்
இருக்கையை விட்டெழுந்து
மறுக்கப்படும் நம்
உரிமைகளுக்காக
உரத்து குரல் கொடுப்போம்
வாருங்கள்!

போராட்ட காலமிது!

- (மூலம்) கந்தர்வன்

## இனி, போராட்டம் ஒன்றே அரசுக்கு புரிய வைக்கின்ற மொழி!

***1917*** நவம்பர் 7-ல் சோவியத் புரட்சி நடைபெற்று தோழர் லெனின் தலைமையில் தொழிலாளர் ஆட்சி அமைந்த நூறாவது ஆண்டில் போராட்ட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அன்று நடைபெற்ற போராட்டத்தை தொடர்ந்து உலகெங்கும் உள்ள தொழிலாளர்களும் தங்களது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

இந்தியா அடிமைப்பட்டிருந்த காலத்திலும் சரி, சுதந்திரம் அடைந்ததற்கு பிறகும் சரி பல்வேறு தீரமிக்க போராட்டங்கள், சமூக விடுதலைக்காகவும், தொழிலாளர்கள் விடுதலைக்காகவும் நடந்துள்ளன. அதன் ஒரு பகுதியாக சமீபத்தில் நடைபெற்ற ஜல்லிக் கட்டுக்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டம் ஒரு மைல் கல்லாகும். இந்தப் போராட்டம், ஜல்லிக்கட்டுக்காக நடத்தியதாக உள்ளடக்கம் இருந்தாலும், இன்றைய ஆட்சியாளர்களின் மக்கள் விரோத கொள்கைகளையும் சாடுகிற எண்ணமும் மாணவர்களிடத்தில் விளைந்திருக்கிறது என்பது இன்னொரு அம்சமாக பார்க்க வேண்டும். அந்த வகையில் இப்போராட்டம் இந்தியாவின் எதிர்காலத்தை நோக்கிய "இந்திய ஜனவரி புரட்சி" என்றழைக்கப்படுகிறது.

மாணவர்களின் இந்தப் புரட்சி நமக்கும், சமூகத்திற்கும், அரசியல்வாதிகளுக்கும், ஆட்சியினருக்கும் பல்வேறு படிப்பினைகளையும், எச்சரிக்கை உணர்வையும் தெரிவித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. போராட்டம் உச்சபட்ச வெற்றியை உறுதியான ஒற்றுமையுடன் சட்டத்தினை மாற்றுவதன் மூலமாக நடந்திருக்கிறது. போராட்டத்தை வளர விட்டால், முதலாளித்துவ குணம் கொண்ட ஆட்சியாளர்களின் முகமூடி கிழிந்துவிடும் என்ற நோக்கத்திலேயே போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது. ஆனாலும்,

திட்டமிட்ட இலக்கான "ஜல்லிக்கட்டு தடையை நீக்க சட்டம் இயற்றியது" மிகப்பெரிய வெற்றியாகும்.

காவல் துறையின் அணுகுமுறை ஒட்டு மொத்த போராடுபவர்களுக்கும், பொது மக்களுக்கும் பயத்தை உருவாக்க வேண்டும் என்பதன் சாராம்சமாக பார்க்க வேண்டியுள்ளது. அரசு ஊழியர்களின் போராட்டம் இந்த வகையில்தான் அடக்குமுறையை சந்தித்து அது பல வெற்றிகளை பெற்றது என்பது நாம் அறிந்ததே.

10.2.1988-ல் தொடங்கிய நமது போராட்டமும் அதனைத் தொடர்ந்து 1988ஆம் ஆண்டு நடைபெற்ற வீரஞ்செறிந்த போராட்டமும், மத்திய அரசுக்கு இணையான ஊதிய மாற்றத்தையும், போனசையும் பெற்றுத் தந்தது. எள்ளி நகையாடியவர்கள் கூட, போராடினால் எதையும் பெற முடியும் என்பதை உணர இந்தப் போராட்டம் நமக்கு வழிகாட்டியது.

ஆட்சியாளர்களின் புதிய பொருளாதார கொள்கையின் விளைவாக தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்பட்டது. தமிழக அரசின் கொள்கை முடிவு நம்மையும் விட்டுவைக்க வில்லை. போனஸ், சரண்டர் விடுப்பு, ஓய்வூதிய பலன்கள் பறிக்கப்பட்டன. உரிமையை மீட்டெடுக்க அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் 2003-ல் நடத்திய வீரம் செறிந்த வேலை நிறுத்தப் போராட்டம்தான் அரசின் அடக்குமுறையிலிருந்து நம்மை மீட்டெடுத்தது. நாம் நடத்திய இந்த வேலை நிறுத்தம் நம் உரிமை மீட்புக்கு அடித்தளமாக இருந்தது. பொதுமக்கள் மற்றும் பலதரப்பு சமூகத்தையும் ஈர்த்தது இந்தப் போராட்டம் தான்.

ஆனாலும் ஆட்சியாளர்கள் தங்களது கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. தொடர்ந்து மக்கள் விரோத நடவடிக்கைகளையும், தொழிலாளர் விரோத நடவடிக்கைகளையும் தொடர்ந்த நிலையில் புதிய பென்சன் திட்டமும், சிறப்பு காலமுறை ஊதிய அவலமும் தொடர்ந்தது. மீண்டும் ஒரு ஒருங்கிணைந்த போராட்டம் சாத்தியமில்லாத நிலையில் அடக்குமுறையை சந்தித்த அதே அரசிடம் 2016ஆம் ஆண்டு தன்னந்தனியாக நாம் நடத்திய காலவரையற்ற வேலை நிறுத்தம், மறியல், காத்திருப்புப் போராட்டம் போன்றவை புதிய பென்சன் உட்பட முதலமைச்சரை சட்டமன்றத்தில் ஒரே நாளில் 110 விதியின்கீழ் 13 அறிவிப்புகள் வெளியிட வைத்தது. அரசு ஊழியர்களுக்கு உற்சாகமளித்த இந்த போராட்டம் இளைஞர்களை கவர்ந்திழுத்தது.

ஆனால், எதிர்பார்த்த ஊதிய மாற்றம், இடைக்கால நிவாரணம், சிறப்பு காலமுறை ஊதிய மாற்றம் ஆகியவற்றில் தேக்கமான நிலையே உள்ளது. அரசியல் சூழ்நிலை ஒருபக்கமும், அரசின் மௌனம் மறு பக்கமும் தொடர்கிறது.

இந்நிலையில்தான் திருவண்ணாமலையில் நடைபெற்ற நமது 12வது மாநில மாநாடு 8வது ஊதிய மாற்றம், புதிய பென்சன் ரத்து, சிறப்பு காலமுறை ஊதிய மாற்றம், 20 சதவீத இடைக்கால நிவாரணம், சாலைப் பணியாளர்களுக்கு 41 மாத ஊதியம் வழங்குதல் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வரையறுத்து காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு முடிவு செய்துள்ளது.

மத்திய, மாநில அரசுகள் பண்பாடு, கலாச்சாரம் உள்ளிட்ட உரிமை தகர்ப்பதில் காட்டும் முனைப்பை தொழிலாளர் நலன் குறித்து காட்டுவதாகவோ, கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. 2017 சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநரின் உரையில் இதுவரை இல்லாத நிகழ்வாக அரசு ஊழியர் நலன் தொடர்பாக எந்தவித அறிவிப்பும் இல்லை என்பது ஏமாற்றமளிக்கிறது. ஆளும் அரசுகள், நாம் போராடிப் பெற்ற உரிமைகளை நமது கரங்களிலிருந்து பறித்துக் கொள்ளும் நிலைக்குத் தான் மீண்டும் மீண்டும் தள்ளப்பட்டுள்ளோம். போராட்டம் மட்டும்தான் அரசிடம் நாம் பேச வேண்டிய, அரசுக்கு நாம் புரிய வைக்க வேண்டிய தெளிவான மொழி என்றாகிவிட்ட நிலையில், பெற்ற உரிமைகள், பெறப்போகும் உரிமைகள் அனைத்திலும் "போராட்டம்" என்ற பேராயுதம்தான் விடையளிக்கும் என்ற உறுதியோடு நம் பயணத்தை அடக்குமுறைக்கு அஞ்சாமல் மாநாடு காட்டிய வழியில் தொடர்வோம். ❖

# திணிக்கப்பட்டவைகளை தீர்த்துக் கட்டுவோம் வா!

பச்சிளங் குழந்தையில்
பாலுக்காக அழுதபோது என்
முதல் போராட்டம்
தொடங்கியது!

பள்ளிக் கூடத்தில்
பாடத்தில்
தேர்ச்சி பெறுவது
அடுத்தகட்ட போராட்டமானது!

பிறகு
பந்தய ஓட்டத்தில்
முந்திச் செல்பவனை
வெற்றிகொள்ள
போராட வேண்டியிருந்தது!

பருவ வயதில்
பாவையின் உளங்கவர
உள்ளுக்குள்ளே ஒரு
போராட்டம் நடந்தது!

பட்டம் முடித்தபின்
வேலைதேடி ஓடியது
வயிற்றுக்கான
போராட்டமானது!

பிள்ளைகள் பெற்றபின்
பள்ளிகள் தேடி
அலைந்ததும் அவர்
கல்வி கற்றதும்
கல்லூரி வாசல்களில்
காத்துக்கிடந்ததும்
பெற்றகடன் தீர்க்கும்
பெரும் போராட்டங்களாயின!

எனக்கு மட்டுமல்ல
நம் எல்லோர் வாழ்விலும்
நிகழும் நிதர்சன
போராட்டங்களே இவை!

நித்தம் நித்தம்
குடும்பத்திற்காக
இத்தனை
போராட்டங்களையும்
சுமந்துவிட்டு
அலுவலகம் வந்தால்
பென்ஷனுக்கான
போராட்டம் என்றும்
பே கமிஷனுக்கான
போராட்டம் என்றும்
அடுத்தடுத்த
போராட்டங்கள்
அணிவகுக்கின்றன!

அதேசமயம்
எந்த வம்புதும்புக்கும்
போகாமல் வீடு
வந்து சேர் என்று
சொந்த பந்தங்கள்
சொடுக்கிடுகின்றன!

வாழ்க்கைக்காக
சபிக்கப்பட்ட
வகைவகையான
போராட்டங்களை
சகிக்கும் நாம்
நம்மீது திணிக்கப்பட்ட
வாழ்வாதாரங்களுக்கான
போராட்டங்களை
முன்னெடுப்பதா?
புறக்கணிப்பதா? என
குழம்பி நிற்கிறோம்

திணிக்கப்பட்ட போராட்டங்களுக்கு
தீர்வு காணாமல்
சபிக்கப்பட்ட போராட்டங்களுக்கு
சாபவிமோசனம் தேட முடியாது

விதிக்கப்பட்ட போராட்டங்களையே
வீழ்த்திவிட்ட நம்மால்
திணிக்கப்பட்ட போராட்டங்களை
தீர்த்துக்கட்ட முடியாதா என்ன?
குழப்பம் எதுவும் தேவையில்லை
கூடிப் போராடாமல்
இங்கெதுவும் சாத்தியமில்லை!

- **ஜிஜி**

பொதுச் செயலாளர் மேசையிலிருந்து...

# அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்!

**மே**லோட்டமாகப் பார்த்தால் நம்புவதற்கு கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். தமிழகத்தின் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே நடக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்காகவா இத்தனை பெரிய போராட்டம் என்று. கொஞ்சம் உற்று நோக்கினால், போராட்டம் ஜல்லிக்கட்டுக் கானது மட்டுமல்ல என்பதும் இதற்குப் பின்னே பல பரிமாணங்கள் உள்ளது என்பதும் புரியும்.

ஒட்டுமொத்த இந்தியாவையும் பிரமிப்பில் ஆழ்த்தியிருக்கிறது இந்தப் போராட்டம். அலங்காநல்லூரில் ஆரம்பித்த போராட்டப் பொறி அடுத்தடுத்து சென்னை, திருச்சி, கோவை, சேலம் என தமிழகத்தின் எல்லா இடங்களிலும் காட்டுத்தீயாகப் பற்றிக் கொண்டது. ஒவ்வொரு ஊரிலும், தெருவிலும், தெருமுக்குகளிலும், அலுவலக வாயில் களிலும், பேருந்து நிறுத்தங்களிலும் ஜனவரி 16ம் தேதியிலிருந்து போராட்டத் தீயின் கனல் கொழுந்து விட்டு எரிந்தது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் மாடுபிடி வீரர்கள் அல்ல; மாட்டை வளர்ப்பவர்களும் அல்ல; நிகழ்ச்சி அமைப்பாளர்களும் அல்ல. சொல்லப் போனால் பெரும்பாலானவர்கள் பார்வை யாளர்கூட இல்லை. இளைஞர்களில் தொடங்கி, மாணவர்களில் தொடர்ந்து, இளைஞிகள், மாணவிகள், பெண்கள், ஆண்கள், குழந்தைகள், முதியவர்கள் என தமிழகத்தின் அனைத்து தரப்பினரையும் வீதிக்கு வந்து நிற்க வைத்த போராட்டம் இது.

போராட்ட களத்தில் வந்து நின்றவர்கள் எல்லோரும் வெவ்வேறு சாதி, மத, இன, மொழி கட்டமைப்புகளைக் கொண்டவர்கள் என்றாலும் இவர்கள் எல்லோரையும் கட்டுப்பாட்டுடன் கட்டி வைத்திருந்தது தமிழர் என்ற அடையாளம் மட்டுமே.வந்திருந்தவர்கள் மனதில் கொழுந்து விட்டு எரிந்த கனலுக்கு காரணம் "தமிழக மக்கள் எல்லா வகைகளிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள், தமிழ் கலாச்சாரம் அழிக்கப்படுகிறது" என்ற எண்ண ஓட்டமே.

காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற தமிழகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் தமிழகத்தின் உரிமைகளை தில்லி தொடர்ந்து புறக்கணித்து வருவதையும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் விவகாரத்தில் மத்திய அரசின் நம்பிக்கை துரோகப் போக்கையும் தமிழக மக்கள் அவ்வளவு சீக்கிரம் மறந்து விட மாட்டார்கள். சமூக ஊடகங்களில் "இனி இந்தியை கட்டாய மாகப் பயன்படுத்த வேண்டும்" என்ற பாஜக அரசின் உத்தரவு, பொது சரக்கு சேவைவரி (GST) விதிப்பு விவகாரத்தில் மாநிலங்களின் உரிமை பறிப்பு முயற்சி, உதய் மின் திட்டம், மத்திய பள்ளி பாடத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் (NEET) மருத்துவ நுழைவுத் தேர்வு - இவை அனைத்தும் தமிழக மக்களின் நலன்களுக்கு குந்தகம் விளைவிப்பவை என்பைத உணர்ந்து அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தவர் மறைந்த முதல்வர் ஜெயலலிதா. மாநிலத்தின் உரிமை சார்ந்த இந்த விஷயங்களில், அவர் மறைவுக்குப் பின், அவருடைய கட்சியும் ஆட்சியும் மத்திய அரசிடம் அந்தர் பல்டி அடித்து, சாஷ்டாங்க சரணாகதி அடைந்தபோது தமிழர்களுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

சட்டமன்றத்தில் பெரும்பான்மை எம்எல்ஏக்களையும், நாடாளுமன்றத்தில் ஐம்பது எம்பிக்களையும் கொண்டிருக்கும் ஒரு ஆளும்கட்சியும், அதன் தலைமையும் கடந்த இரண்டு வருடங்களாக "ஜல்லிக்கட்டு இதோ வருகிறது, அதோ வருகிறது" என பூச்சாண்டி காட்டி ஒவ்வொரு வருடமும் ஜனவரியோடு அந்தப் பிரச்சினையை மறந்து போனதும், பாரதிய ஜனதா கட்சியின் மத்திய அமைச்சர்கள், மாநில நிர்வாகிகள், ஊடக பேச்சாளர்கள் என்று அனைவரும் இந்த

வருடம் ஜல்லிக்கட்டு கண்டிப்பாக நடக்கும் என்று கடைசி வரை பொய் கூறி மக்களுக்கு நம்பிக்கை துரோகம் இழைத்ததும், போதாக் குறைக்கு பொங்கல் பண்டிகையை பொது விடுமுறைப் பட்டியலிலிருந்து நீக்கி, பொது மக்கள் கோபக்குரல் கொடுத்தபின் வாபஸ் பெற்றதும் தமிழக மக்களின் கோபத்தை கொந்தளிப்பாக மாற்றியது.

தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின்னரும் தண்ணீர் திறந்து விடாத கர்நாடக அரசை மத்தியில் ஆளும் மோடி அரசு கண்டிக் காததுடன், அந்தத் தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையில் விவசாயம் செய்த டெல்டா விவசாயிகள் வரலாறு காணாத வகையில் வறட்சியில் சிக்கி உருக்குலைந்து உயிரிழந்த சூழ்நிலையில் அவர்களுக்கு இன்றுவரை நிவாரணத் தொகை கொடுக்காமல் காலந் தாழ்த்தி வரும் மத்திய அரசின் போக்கும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாது என்று உச்சநீதிமன்றத்தில், தமிழக விவசாயிகள் நலனுக்கு எதிராக மல்லுக்கட்டி நின்ற மத்திய அரசின் நடவடிக்கையும், நடுவண் அரசு மீது தமிழக மக்கள் உக்கிர மானதொரு அக்கினிக் கங்குவை நெஞ்சுக்குள் கட்டி வைக்கக் காரணங்களாயின. மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் அக்கறை கொள்ளாமல், அடுத்த பொதுச் செயலாளர் யார்? அடுத்த முதல்வர் யார்? என்ற அதிகாரப் போட்டியில் அமைச்சர்களும் எம்எல்ஏக்களும் போயஸ் தோட்டத்திலேயே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடந்ததும் மக்களிடையே வெறுப்பையும், எரிச்சலையும் ஏற்படுத்தியது. கங்கு கட்டி நின்ற இத்தனை எரிச்சல்கள் மீதும் தீப்பொறியாய் வந்து விழுந்ததுதான் "ஜல்லிக் கட்டு நடத்த அவசர சட்டம் இயற்ற முடியாது, வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது" என்ற பிரதமர் மோடியின் கைவிரிப்பு.

தமிழர் என்றோர் இனமுண்டு, தனியே அவர்கோர் குணமுண்டு என்பதை உணர்த்திய இந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தில் ஒட்டு மொத்த தமிழக மக்களின் எழுச்சியைக்கண்டு அரண்டு போயிருப்பது மத்திய மாநில அரசுகள் மட்டுமல்ல இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த அரசியல்களமும்தான். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள இளைஞர்கள் அந்தந்த மாநிலத்து அரசியல்வாதிகள் செய்ய மறுக்கும் சமூக அக்கறையுள்ள பிரச்னை களுக்காக குரல் கொடுப்பார்கள், கொடுக்க வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமாக இப்போராட்டம் மாறியுள்ளது. இந்த தன்னெழுச்சிப் போராட்டம் தற்கால அரசியல்களத்தின் ஆணிவேரையே ஆட்டம் காண வைக்கக் கூடிய சூழலை தமிழகத்தில் மட்டுமல்ல இந்திய அளவில் ஏற்படுத்தக் கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கருது கிறார்கள். அது உண்மைதான் என்பதற்கு இந்த கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் வேளை யிலேயே பக்கத்து மாநிலங்களான கர்நாடகா விலும் ஆந்திராவிலும் மாணவர் போராட் டங்கள் ஆரம்பித்துவிட்டதாக செய்திகள் வருகின்றன

அவசரச் சட்டம் நிரந்தரச் சட்டமாக இருக்க வேண்டும் என்பதில் மாணவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதனால்தான் அவர்கள் அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னரும் போராட் டத்தை கைவிட மறுத்தனர். மாணவர்களின் இந்தச் செயல் நியாயமானதுதானா? முதலமைச்சர் முதற்கொண்டு மத்திய அமைச்சர்கள் வரை உறுதி கொடுத்துவிட்ட பின்பும் இவர்கள் போராட்டத்தைத் தொடர்வது தேவையற்றது என்று ஒரு கருத்தாக்கம் பொதுவெளியில் வந்தது. கொஞ்சம் பின்னோக்கிப் பார்த்தால் மாணவர்கள் பிடிவாதத்தில் நியாயம் இருக்கிறது என்ற புரிதல் எல்லோர் மனதிலும் ஏற்படும். 2014ல் இதே போன்றதொரு அவசரச் சட்டத்தை மத்திய அரசு பிறப்பித்தபோது மூன்று நாட்களுக்குள் பீட்டா அமைப்பினர் அதற்கு உச்ச நீதிமன்றத்தில் தடை பெற்றனர். இப்போதும் அதே நிலை ஏற்படாது என்று யாரும் உத்தரவாதம் கூற முடியாது. இந்த அவசர சட்டத்தை சட்ட முன்மொழிவாக சட்டமன்றத்தில் இயற்றினாலும் அதை எதிர்த்தும் வழக்கு தொடர்ந்து தடை பெற முடியும் என்ற நிலைதான் உள்ளது. தற்போது உச்சநீதிமன்றத்தில் தீர்ப்புக்காக நிலுவையில் உள்ள ஜல்லிக்கட்டு தடை நீக்கக் கோரும்

வழக்கில் அரசுக்கு எதிராக தீர்ப்பு வந்துவிட்டால் இப்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அவசர சட்டமே கூட செயலற்றதாக ஆகிவிடக்கூடிய சூழ்நிலைகள் உள்ளது.

அப்படியானால் நிரந்தரச் சட்டமாக இதை மாற்ற என்ன செய்ய வேண்டும்? இந்த சட்டத்தை இந்திய அரசிய லமைப்புச் சட்டம் ஒன்பதாவது அட்டவணையில் 31-பி பிரிவில் சேர்க்க வேண்டும். அப்போது தான் ஜல்லிக்கட்டு விளை யாட்டுக்கான நிரந்தர சட்டப் பாதுகாப்பு கிடைக்கும். இதற்கான முன்னுதாரணம் உள்ளது. 1994ல் தமிழக அரசு 69 சதவீத இட ஒதுக்கீட்டை இயற்ற சட்டம் இயற்றிய போது அதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒன்பதாவது அட்ட வணையில் 31-பி பிரிவில் சேர்க்க வைத்தது. இதனால் அந்த சட்டத்தை எதிர்த்து கேள்வி கேட்கவோ ரத்து செய்யவோ எந்த நீதி மன்றத்திற்கும் அதிகார வரம்பு இல்லாமல்போனது. மாணவர்களும் அது போன்ற தொரு சட்டப் பாதுகாப்பைத் தான் கேட்கிறார்கள்.




மாணவர்கள் போராட்டத்தில் உள்ள நியாயத்தை முதல்வரும் மற்ற அமைச்சர்களும் உணர்ந்து கொள்ளாமல் மீண்டும் மீண்டும் அவசர சட்டமே ஒரு நிரந்தரச் சட்டம் தான் என ஊடகங்களில் கூறி வந்தார்களே தவிர அது எப்படி சாத்தியம் என்பதை மாணவர்களுக்கு விளக்கவோ மாணவர் பிரதிநிதிகளுக்கு அவசரச் சட்டத்தின் நகலை கொடுத்து அவர்களை சமாதானப்படுத்தி போராட்டத்தை கைவிடக் கோரும் முயற்சியில் ஈடுபட்டதாகவோ தெரியவில்லை. காவல்துறை அதிகாரிகள்தான் திரும்பத் திரும்ப மாணவர்களிடம் உங்கள் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது போராட்டத்தை கைவிடுங்கள் என்று பேசி வந்தனர். 1968 மொழிப் போராட்டத்தின் போது அப்போதைய தமிழக முதல்வர் அண்ணா மாணவர்களுடன் தொடர்ந்து ஐந்து நாட்கள் பேச்சு வார்த்தை நடத்தி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்த நிகழ்வு நினைவுக்கு வருகிறது. அதுபோல் இன்றைய முதல்வர் மாணவர்களை நேரில் அழைத்தாவது நம்பிக்கை அளிக்கும் விதத்தில் பேசி போராட் டத்தை அமைதியாக முடித்திருக்கலாம். அதை செய்யத் தவறியதுதான் அதன்பிறகு நடந்த அனைத்து வன்முறைகளுக்கும் காரணமானது.

இந்தப் போராட்டத்திலிருந்து புதிய நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் தோன்றியிருக் கின்றன. தேர்தலை அன்றி மாற்றம் கொண்டு

வர இந்த ஜனநாயகத்தில் வேறு வழியில்லை என்கிற மனோபாவம் மாற்றப்பட்டு ஒரு களத்தில் ஒன்றுகூடி அமர்ந்தாலே ஜனநாயகத்தில் மாற்றம் நிகழும் என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. நான்கரை ஆண்டு லாப வேட்டைக்காக ஒரு கட்சி எல்லா அசிங்கங்களையும் ஒதுக்கிவிட்டு வெளிப்படையாக எதையும் அரங்கேற்றத் துணிவதும் ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் எனக்கென்ன எனக்கு தேவையானது கிடைத்தால் போதும் என்கிற அளவுக்கு தமிழக அரசியல் தரம்தாழ்ந்துவிட்ட நிலையில் அரசியல் மீதும் அரசியல்வாதிகள் மீதும் மாணவர்கள் மற்றும் இளையதலைமுறையினர் முற்றிலும் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பது நிதர்சனமே.

தற்போது மெரீனாவில் போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அரசும் காவல்துறையும் மாணவர்களை ஒன்று சேர விடாமல் தடுப்பதால் மட்டுமே நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம் என்று நினைத்து செயல்பட்டால் அது இந்த அரசு தன் தலையில் தானே மண்ணை கொட்டிக் கொள்வதாக அமைந்துவிடும். இனி தமிழ்நாட்டின் கட்சிகள் எதுவாகினும் அவை ஒட்டுமொத்த தமிழர் நலன்சார்ந்து இயங்க வேண்டும். முடிவுகள் தமிழர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும். போராடும் மாணவர்கைள அழைத்துப் பேச வேண்டும். அவர்களை புறந்தள்ளிவிட்டு போக நினைத்தால் அவர்கள் எதிர்வரும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் களம் கண்டு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கக்கூடும்.

தலைவனோ தலைமையோ இன்றி தன்னெழுச்சியுடன் தரம்குன்றா ஒழுங்கமைப்புடன் நடந்த இந்த போராட்டம் ஒட்டுமொத்த தமிழக மக்களையும் தலைநிமிர வைத்துள்ளது. அகிலமே அண்ணார்ந்து பார்த்த மாணவர்களின் இந்தப் போராட்டத்தை இனி என்று அசை போட்டாலும் இந்தப்பாடல்தான் நெஞ்சுக்குள் ரீங்காரமிடும்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு தமிழ்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ? ❖

## பணி நிறைவு வாழ்த்துக்கள்



**பரண்மீது கிடந்த**
**நற்பல சிந்தனைகளை**
**சிரமேற்கொண்டு சீரமைத்து,**
**சரம் சரமாய் கவிதொடுத்து,**
**கரம் கோர்த்த தோழமைக்கு**
**அரண்காத்து அறம் சேர்த்த**
**பெரணமல்லூர் சேகரனின்**
**அரசுப்பணி ஓய்ந்தாலும்,**
**புரட்சிகவி கொட்டும்**
**முரசுப்பணி முழங்கட்டும்,**
**ஓய்வு(வயது)க்குப் பிறகும்**
**உற்சாக வாழ்க்கை தொடரட்டும்!**

என வாழ்த்தும்
***அரசு ஊழியர் சங்கம்***
மாநில மையம்

## வாழ்த்துக்கள்

**கா**ந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகத்தில் 23.1.2017 ல் நடைபெற்ற 33வது பட்டமளிவிப்பு விழாவில் அரசு ஊழியர் சங்க மதுரை மாவட்டச் செயலாளரும், மதுரை மாவட்ட புள்ளிஇயல் அலுவலருமான முனைவர் சு.கிருஷ்ணன் "மகாத்மா காந்தி வேலை வாய்ப்புத் திட்டத்தின் பலன்களும் கிராமப்புற வாழ்வியல் மேம்பாடுகளும்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றார். பல்கலைகழக வேந்தர் ரேனணா ஜாப்வாலா மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் நடராஜன் ஆகியோர் பட்டம் வழங்கினர். இவருக்கு அரசு ஊழியர் சங்கத்தின் வாழ்த்துக்கள்.

**த**மிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்திற்கு 2017-2018ஆம் ஆண்டுக்கான மாநில நிர்வாகிகள் தேர்தலில் தலைவராக சி.ராமலிங்கம், துணைத் தலைவராக மு.முருகன், துணைத் தலைவர் (நகரம்) என்.சுப்பிரமணியன், பொதுச் செயலாளராக என்.ரமேஷ், செயலாளராக மு.சீனிவாசன், அமைப்புச் செயலாளராக ப.நடராசன், பொருளாளராக நா.திருநாவுக்கரசு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு அரசு ஊழியர் சங்கத்தின் வாழ்த்துக்கள். ❖

# செல்லாக் காசும் சொல்லாத் துயரும்!

## (பணத் தட்டுப்பாடு எதிர்ப்புக் குழுவின் நடவடிக்கைகள்)

**ப**ணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழு சார்பில் மத்திய அரசின் பண மதிப்பு இழப்பு நடவடிக்கைக்கு எதிராக ஜனவரி 31-ல் தமிழகம் முழுவதும் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

பணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழுவின் அமைப்புக் கூட்டம் 13.1.2017 அன்று சென்னையில் க.சாமிநாதன் (காப்பீடு) தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அ.சவுந்தரராசன், ஜி.சுகுமாறன் (சிஐடியு), எம்.துரைபாண்டியன் (மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம்), சி.பி.கிருஷ்ணன் (இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம்-த.நா), தி.கலைச்செல்வி (அரசு ஊழியர் சங்கம்), டி.செந்தில்குமார் (காப்பீடு), எஸ்.பக்தவச்சலம் (ஆசிரியர்), ஆர்.சேகரன் (வங்கி அதிகாரிகள் சங்கம்), எஸ்.செல்லப்பா, கே.சீனிவாசன் (தொலைத்தொடர்பு), ஆர்.ஜோதி (அனைத்துத் துறை ஓய்வூதியதாரர்கள்), பாலா (வாலிபர் சங்கம்), உச்சிமாகாணி (மாணவர் சங்கம்), பிரமிளா (மாதர் சங்கம்), நம்புராஜன் (மாற்றுத் திறனாளிகள் சங்கம்), பி.சண்முகம் (விவசாயிகள் சங்கம்), வி.அமிர்தலிங்கம் (விவசாய தொழிலாளர் சங்கம்) உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்தியா முழுமையுமுள்ள உழைப்பாளி மக்களின் வாழ்நிலையில் கடும் பாதிப்புகளை உருவாக்கியுள்ள "செல்லாப் பண நடவடிக்கை" யால் ஏற்பட்டுள்ள எதிர்வினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக் குழுவில் இடம் பெற்றுள்ள அமைப்புகள் தங்களின் சுயேச்சையான இயக்கங்களை நடத்தியிருக்கின்றன. சென்னையிலும், மதுரையிலும், வாலிபர், மாணவர், மாதர் அமைப்புகள் நடத்திய போராட்டத்தில் காவல் துறை கடுமையான அடக்குமுறையை ஏவிவிட்டதையும், சிறையிலடைத்ததையும் மீறி முன்னணி ஊழியர்கள் உறுதியோடு களத்தில் நின்றிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். மக்களின் நலனுக்காக போராட்டத்தை ஒடுக்க முனைந்த தமிழக காவல் துறையின் நடவடிக்கைக்கு இக்கூட்டம் கண்டனத்தை தெரிவித்தது.

செல்லாப் பண நடவடிக்கையின் நோக்கங்களாக மத்திய அரசு கருப்புப் பண ஒழிப்பு, கள்ளப் பண ஒழிப்பு, தீவிரவாத நடவடிக்கைகளுக்கான ஊற்றுக்கண்ணை அடைப்பது, லஞ்ச-ஊழல் தடுப்பு ஆகியனவற்றை அறிவித்தது. ஆனால், கடந்த 65 நாட்களின் அனுபவம் இந்த இலக்குகளை நோக்கிய அறிகுறிகள் எதையும் உணர்த்தவில்லை என்பதே உண்மை.

அரசின் அறிவிக்கப்பட்ட இலக்குகள் ஈடேறவில்லையென்பதோடு, இந்த நடவடிக்கை இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைக் கடுமையாக சீரழித்திருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சரிவு பற்றிய பல மதிப்பீடுகளில் ஒன்று 3 சதவீதத்திற்கும் மேலான சரிவைக் கணித்துள்ளது. சிறு தொழில்கள், சிறு வியாபாரங்கள் பெரும் பாதிப்புகளக்கு ஆளாகியுள்ளன. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்புகளுக்கு ஆளாவார்கள் என கணிப்புகள் கூறுகின்றன. கிராமப்புறங்களில் 100 நாள் வேலைத் திட்டம் ஸ்தம்பித்து நிற்கிறது. ஏடிஎம்கள் செயலிழந்தும், வங்கிகளின் வாசல்களில் பெரும் கூட்டங்களும் காணப்படுகின்றன. 115 உயிர்கள் பறிபோயிருக்கின்றன. மிகுந்த இன்னல்களுக்கு மத்தியில் மக்கள் சேவை ஆற்றி வருகிற வங்கி அதிகாரிகள்-ஊழியர்கள் உயிரிழப்புகளும் இதில் அடக்கம்.

'கறுப்புப் பண ஒழிப்பிலிருந்து' தனது இலக்கை 'காசற்ற பொருளாதாரத்திற்கு' அரசு மாற்றியிருப்பது மக்களின் கவனத்தை திசைதிருப்புகிற உத்தி மட்டுமல்ல, பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நிறுவனங்களின் சந்தை வேட்டைக்கு வழிவகுப்பதாகும்.

அனைத்து தரப்பு மக்களையும் பாதித்துள்ள பணத்தட்டுப்பாடு நடவடிக்கைக்கு எதிராக சிஐடியு, மத்திய-மாநில அரசு ஊழியர், ஆசிரியர், வங்கி, காப்பீடு, தொலைத்தொடர்பு, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர், மாதர், வாலிபர், மாணவர், வழக்கறிஞர், மாற்றுத் திறனாளி உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து பணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழு சார்பில் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

**கோரிக்கைகள்**

1. மக்கள் சொந்தப் பணத்த எடுக்க எந்த கட்டுபாடுகளும் கூடாது.
2. காசற்ற பொருளாதாரத்தில் மக்களை கட்டாயப்படுத்தி தள்ளாதே.
3. கறுப்புப் பணத்தை கைப்பற்ற உறுதியான நடவடிக்கை எடு.
4. விவசாய வேலைகள் முடங்கியிருப்பதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் கடன்களை ரத்து செய்.
5. கிராமப்புற 100 நாள் வேலைத் திட்ட ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக்கு.
6. செல்லாப்பண நடவடிக்கையால் உயிரிழந் துள்ள மக்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்கு.
7. பாதிக்கப்பட்டுள்ள சிறு, நடுத்தர தொழில் களுக்கு வரிச்சலுகை வழங்கு.
8. கூட்டுறவு வங்கிகள் மீதான அதீதக் கட்டுப்பாடுகளை தளர்த்து.
9. மாநில அரசுகளுக்கு ஆகிற கூடுதல் செலவினத்தை ஈடுகட்டு.
10. வேலை இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கு.
11. ஆதார் இணைப்பைக் கட்டாயமாக்கி ரேசன் வழங்குவதை நிறுத்தாதே.

**இயக்கங்கள்**

- ஜனவரி 29, 30, 31 ஆகிய மூன்று நாட்கள் பிரச்சார இயக்கம் நடத்துவது.
- ஜனவரி 27 அன்று தொழிலகங்கள், அலுவலகங்கள் முன்பு வாயிற் கூட்டங்கள் நடத்துவது.
- காலை 9 மணி முதல் 1 மணி வரை அனைத்து தாலுக்கா மையங்களில் இல்லந்தோறும் துண்டுப் பிரசுரங் களோடு மக்களை சந்திப்பது.
- மாலை 4 மணி முதல் 9.00 மணி வரை வேன் பிரச்சாரம் அல்லது ஆட்டோ மைக் பிரச்சாரம் (தாலுகா மையங்களில் ஜனவரி 29, 30)
- இதற்கான மாவட்ட அளவிலான தயாரிப்புக் கூட்டங்களை ஜனவரி 19க்குள் நடத்துவது.
- சென்னையில் ஜனவரி 25 பத்திரிகை யாளர் சந்திப்பு கூட்டத்தை நடத்துவது.
- ஜனவரி 31 அன்று மாலையில் மாவட்ட தலைநகரங்களில் மாவட்டம் முழுமையு மான திரட்டலோடு "மனித சங்கிலி" நடத்துவது - மனித சங்கிலியில் வணிகர் அமைப்புகள், குடியிருப்பு நல சங்கங்கள் போன்ற அமைப்புகளுக்கு அழைப்பு விடுப்பது என்று திட்டமிடப்பட்டது. இதனடிப்படையில்...

**நாகை**

குத்தாலம், கொள்ளிடம், கீழையூர், செம்பனார்கோயில், ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவகங்கள் மற்றும் நாகை, மயிலாடுதுறை, வேதாரண்யம், சீர்காழி ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பும் 27.01.17 அன்று மாலை வாயிற் கூட்டங்கள் நடைபெற்றது.

நாகை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற வாயிற் கூட்டத்திற்கு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன்



சீர்காழி



நாகை

சேரல் தலைமை தாங்கினார். ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, ஓய்வுபெற்ற பள்ளிக் கல்லூரி ஆசிரியர் சங்க



மாவட்டச் செயலாளர் வி.பாலசுப்பிர மணியன், நாகை தொழிற் சங்கக் கூட்டமைப்புத் தலைவர் சு.சிவகுமார் மற்றும் இந்திய தொழிற்சங்க மைய மாவட்டச் செயலாளர் சீனி.மணி ஆகியோர் 31.01.17 அன்று நடைபெறவுள்ள மனிதச் சங்கிலி குறித்து விளக்கவுரையாற்றினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நன்றிகூறினார்.

கொள்ளிடத்தில் நடைபெற்ற வாயிற் கூட்டத்திற்கு வட்ட துணைத் தலைவர் எம்.சோழராஜன் தலைமை வகித்தார். அரசு ஊழியர் சங்க மாவட்ட துணைத் தலைவர் எம்.சௌந்தரபாண்டியன் சிறப்புரையாற்றினார்.



கொள்ளிடம்

இந்திய தொழிற்சங்க மையம், அரசு ஊழியர் சங்கம், ஓய்வூதியர் சங்கம், ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கம், பி.எஸ்.என்.எல் ஊழியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் உறுப்பினர்கள் திரளாக வாயிற் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**தென் சென்னை**

11.1.2017 அன்று மாவட்டம் முழுவதும் 13 இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. இதில் முன்னாள் மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி, முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.எஸ்.அப்பர், மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, மாநிலப் பொருளாளர் தங்கராஜ் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சா.டானியல் ஜெய்சிங், எம்.வெங்கடேசன், பா.புகழேந்தி, நா.வினோத்குமார், ஆர்.என்.நம்பிராஜன், கே.இரகுராமன், உ.சுமதி, இரா.வெற்றி செல்வன், தெ.வாசுகி, எம்.சுதா, டி.கோவிந்த ராஜன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை மற்றும் கோரிக்கை விளக்கவுரையாற்றினர்.

சேப்பாக்கம், டி.எம்.எஸ்., டி.பி.ஐ., அடையாறு, கிண்டி-தாம்பரம், சைதை-நந்தனம், அண்ணாநகர் ஆகிய பகுதிக் குழுக்களில் 13 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 565 பெண் ஊழியர்கள் உள்ளிட்ட 1525 ஊழியர்கள் இதில் பங்கேற்றனர். ❖

## மேல்முறையீட்டு மனு நிலுவையில் இருந்தாலும் அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு

**ல**ஞ்சம் அல்லது இதர குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அரசு ஊழியர் விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு அது தொடர்பான மேல்முறையீட்டு மனு மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தாலும் பதவி உயர்வு கிடைக்கும்.

இது பற்றிய புதிய சட்ட விதிகளை மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் வகுத்துள்ளது. லஞ்சம் அல்லது இதர குற்றப் புகார்கள் தொடர்பான வழக்கில் அரசு ஊழியர் விடுவிக்கப்பட்ட நிலையில் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட் டாலோ அல்லது மேல்முறையீடு செய்ய திட்ட மிட்டாலோ என்ன செய்வது என கேட்டு மனுக்கள் வருவதால் இந்த விளக்கத்தை மத்திய அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

# தோழரே... 'தோழர்' என்ற சொல்லின் வரலாறு தெரியுமா உங்களுக்கு?

"**உ**ங்கள் குழந்தைகளை யாராவது போனில் அழைத்து, 'தோழர்' என்று பேசத் தொடங்கினால், உடனே அவர்களின் தொடர்புகளைத் துண்டிக்கச் செல்லுங்கள்"- தமிழகக் காவல் துறை அதிகாரியிடமிருந்து இப்படி ஒரு செய்தி சொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின்றன. 'தோழர்' என்ற வார்த்தை எப்போதுமே அதிகார வர்க்கத்தைக் குலைநடுங்கச் செய்வது. சாணிப்பாலும் சவுக்கடிக் கொடுமைகளும் நிறைந்த கீழத் தஞ்சை மாவட்டத்தில் 'தோழர் பி.எஸ்.ஆர்' என்றழைக்கப்பட்ட பி.சீனிவாசராவின் பெயரைக் கேட்டாலே நிலப்பிரபுக்கள் கனவிலும் எரிச்சல் அடைந்தார்கள். இப்படி ஒவ்வொரு நிலப்பரப்பிலும் மக்களுக்காக உழைத்த எண்ணற்ற 'தோழர்'களால் ஆனது தான் தமிழக வரலாறு. இன்று தமிழகத்தில் நடைபெற்றிருக்கும் எத்தனையோ மாற்றங்களுக்குக் காரணமாய் இருந்தவர்கள், சமயங்களில் வரலாற்றின் எந்தப் பக்கங்களிலும் இடம்பெறாமல் மறைந்துபோன 'தோழர்'கள் தான். 'தோழர்' என்ற வார்த்தை முற்போக்கு அரசியலுக்கு உரியது. முற்போக்கு இயக்கங்களில் இருப்பவர்களும் இயக்கங்களில் இல்லாவிட்டாலும் முற்போக்குக் கருத்தியல் கொண்டவர்களும் 'அம்மா' 'அப்பா' என்ற வார்த்தையை விட அதிகம் நேசிப்பது இந்த வார்த்தையைத்தான். 'அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தால் நீயும் என் தோழனே' என்ற சேகுவாராவின் வார்த்தைகளும் தமிழர்கள் மத்தியில் புகழ்பெற்றதுதான்.

19ஆம் நூற்றாண்டில் 'தோழர்' என்னும் வார்த்தை ஒரு அரசியல் சொல்லாடலாக உருப்பெற்றாலும் அதற்குமுன்பே நமது பழந்தமிழ் இலக்கியத்திலும் இந்த வார்த்தை உண்டு.

`இவர் யார்?` என்குவை ஆயின்,
இவரே ஊருடன் இரவலர்க்கு
அருளித் தேருடன் முல்லைக்கு
ஈத்த செல்லா நல்லிசை
படுமணி யானைப் பறம்பின்
கோமான் நெடுமாப் பாரி மகளிர்;
யானே தந்தை தோழன்;
இவர்என் மகளிர்'

என்கிறார் மூவேந்தர்களால் வஞ்சகமாய் வீழ்த்தப்பட்ட பாரி மன்னனின் 'தோழரான' புலவர் கபிலர்.

உலகளவில் பிரெஞ்சுப் புரட்சியின் விளைபொருள் இந்த வார்த்தை. பிரெஞ்சுப் புரட்சியை நடத்தியவர்கள் தங்களுக்குள் 'சிட்டுவாயோன்' என்று அழைத்துக்கொண்டனர். 'சிட்டுவாயோன்' என்றால் 'குடிமகன்' என்று பொருள். பின்னாளில் ரஷ்யப் புரட்சி வீரர்கள் 'காம்ரேட்' என்று அழைக்கத் தொடங்கினர். இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருப்பவர்கள் 'காம்ரேட்' என்று தங்களை அழைத்துக்கொண்டாலும் அதற்கு இணையான அழகான, தனித்துவமிக்கத் தமிழ்ச்சொல்லாக உருவானது 'தோழர்'.

'தோழர்' என்ற வார்த்தையைத் தமிழில் முதன்முதலில் பயன்படுத்தியவர் திரு.வி.க. என்கிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு. இந்தியாவில் முதல் தொழிற்சங்கத்தைத் தொடங்கியவர் திரு வி.கல்யாணசந்தரம். திரு.வி.க.விற்குப் பிறகுத் தொழிற்சங்கத் தலைவரான பொம்மன்ஜி வாடியா, மான்செஸ்டர் தொழிலாளர்கள் அழைப்பின்பேரில் இங்கிலாந்து சென்று வந்தார். தமிழகம் வந்த அவரை வரவேற்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் 'காம்ரேட்ஸ்' என்று உரையைத் தொடங்கினார் வாடியா. அதைத் 'தோழர்களே' என்று மொழிபெயர்த்தார் திரு.வி.க.

சோவியத் யூனியன் செல்வதற்கு முன்பே பெரியாருக்குப் பொதுவுடைமைக் கொள்கைகளில் ஆர்வம் இருந்தாலும் 1931ல் ரஷ்யா சென்று வந்த பிறகு கம்யூனிசத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டினார்.

"இயக்கத் தோழர்களும் இயக்க அபிமான தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளுவதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக "தோழர்"

என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா, ஸ்ரீ, கனம், திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பது போன்ற வார்த்தைகள் சேர்த்து பேசவோ எழுதவோ கூடாது என்று வணக்கமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். "குடி அரசி" லும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக் கிறேன்" - இது 13.11.1932ல் பெரியார் குடியரசில் எழுதியது.

பெரியாரின் முக்கியத் தளபதியும் சிறந்த பேச்சாளருமான பட்டுக்கோட்டை அழகிரிசாமி மேடையில் 'தோழர் ராமசாமி' என்றுதான் பெரியாரை அழைப்பாராம். பெரியாரும் தன் கட்டுரைகளில் மாற்றுக் கருத்துள்ளவர் களைக்கூட அப்படித்தான் விளித்து எழுதினார். காந்தி, 'மகாத்மா' என்றழைக்கப்பட்டபோது 'தோழர் காந்தியார்' என்றெழுதினார் பெரியார். 'பெரியார் என்று என்னை அழைக்க வேண் டாம்; தோழர் என்றே அழையுங்கள்' என்று அவர் சொன்னாலும் 'பெரியார்' என்ற பெயரே நிரந்தரம் ஆனது.

அண்ணா, திராவிடர் கழகத்தில் இருந்த காலம் முழுவதும், தி.மு.க. தொடங்கிய ஆரம்பகாலங்களிலும் 'தோழர்' என்று தன் உரைகளில் குறிப்பிட்டுப் பேசியிருப்பதைப் பழைய 'குடியரசு', 'திராவிட நாடு' இதழ்களில் படித்தால் தெரிந்துகொள்ளலாம். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாகத் தி.மு.க.வில் இப்படி விளிப்பது மறைந்துபோய் அண்ணா, கலைஞர், நாவலர் என்று அடைமொழிகளே பெயர்கள் ஆயின. அடைமொழிகள் இல்லாதவர்கள் ஆற்காட்டார், நாஞ்சிலார் என்று ஊர்ப்பெயர் களையே அடைமொழிகளாக மாற்றிக் கொண்டார்கள். 'தோழர்' என்ற சமத்துவச் சொல்லும் மனநிலையும் மறைந்து தலைமை வழிபாடு தலைதூக்கத் தொடங்கியது. இப்போதும் அத்திபூத்தாற்போல் கருணாநிதி, அன்பழகன், சிலசமயம் ஸ்டாலின் அறிக்கை களிலும் 'கழகத் தோழர்கள்' என்ற வார்த்தையைப் பார்க்கமுடியும். அ.தி.மு.க. ஆரம்பித்ததில் இருந்தே பிம்பங்களையும் தலைமை வழிபாட்டையும் அடிப்படையாகக் கொண்ட கட்சி என்பதால் அங்கே 'தோழருக்கோ' தோழமைக்கோ வழியே



யில்லை.

இப்படித் திராவிட இயக்கங்கள் 'தோழரை'க் கைவிட்டாலும் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் 'தோழரை'க் கைவிடவில்லை. எந்த கம்யூனிஸ்ட் இயக்கங்களாக இருந்தாலும் அவர் வட்டச் செயலாளராக இருந்தாலும் தேசியளவிலான தலைவராக இருந்தாலும், பொலிட்பீரோ உறுப்பினராக இருந்தாலும், தொழிற்சங்கத்தின் சாதாரண உறுப்பினராக இருந்தாலும் அவர் 'தோழர்'தான். தலைமை வழிபாடு என்பதற்குச் சம்மட்டி அடிக்கும் சொல் 'தோழர்'. மற்ற எந்த இயக்கங்களிடம் இல்லாத இந்த அரிய பண்பைக் காப்பாற்றி வரும் பெருமை கம்யூனிஸ்ட் தோழர்களுக்கே உண்டு. இப்போது மார்க்சிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, தலித் இயக்கங் களைச் சேர்ந்தவர்கள், தமிழ்த்தேசிய இயக்கங் களைச் சேர்ந்தவர்கள், பெரியாரிஸ்ட்கள், அம்பேத்கரிஸ்ட்கள், முற்போக்கு எழுத் தாளர்கள் எனப் பலரும் பரவலாக 'தோழர்' என்னும் சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பொதுவாக ஒரு சமூகத்தில் காணப்படும் அதிகாரமும் வன்முறையும் அந்த சமூகத்தின் மொழியிலும் பிரதிபலிக்கும். தமிழிலும் சாதிய, ஆணாதிக்கச் சொற்கள் ஏராளம். ஆனால் பால் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஆண், பெண், திருநங்கைகள் என அனைவருக்கும் பொதுவான சொல் 'தோழர்'. தோழர் - சமத்து வத்துக்கான சொல், தலைமை வழிபாட்டுக்கு எதிரான சொல், தோழர் - ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான சொல், தோழர் - ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சொல், தோழர் - அதிகார மய்யங்கள் அச்சப்படும் சொல், தோழர் - கேட்கப்படாத குரல்களின் சொல்.

- **ரீ.சிவக்குமார்** *(நன்றி:ஆனந்த விகடன்)*

# கற்றுக்கொள்வோம்!

உலகையே தன் பக்கம் இழுத்து கவனிக்க வைத்து பல்வேறு படிப்பினைகளை பலருக் கும் தந்து முடிந்துள்ள ஜல்லிக்கட்டு வேண்டி நடத்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டம் குறித்து தனியே சொல்வதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை. சமூக வலை தளங்களிலும், பத்திரிக்கைகளிலும், தொலைக் காட்சிகளிலும் பல்வேறு கருத்துக் களை, விவாதங்களை கழுவிக் கழுவி ஊற்றிவிட்டார்கள். ஆனால் கற்றுக்கொண்டு தொடர்ந்து முன்னேற, தடைகளைத் தகர்க்க பல விசயங்கள் இதிலே உள்ளதைப் பற்றி பரிசீலிப்போம்.

“ஆடிப் பட்டம் தேடி விதை” என்று ஒரு பழமொழி தமிழர் மத்தியில் உள்ளது. ஆடி மாதத்தில் விதை பாவினால்தான் பயிர் வளர்ந்து அறுவடைக்கு வரும் வரை சரியான பருவத்தில் சரியாக இருக்கும் என்பதை குறிப்பதாகும். எந்த செயலையும் உரிய காலத்தில் துவங்குவது பாதி வெற்றிக்கு வித்தாக அமையும் என்பதை நிருபிக்கும் விதமாக இப்போராட்டம் அமைந்தது. அறுவடைத் திருநாள் என அழைக்கப்படும் பொங்கல் திருநாள் எந்த ஆண்டையும் விட இந்த ஆண்டு சிறப்பாக கொண்டாட வழியே இல்லாத ஆண்டாக இருந்தது. மழை போதுமான அளவில் இல்லாததாலும், காவிரியிலிருந்து உரிய நீர் பெற்றுத் தரப்படாததாலும் தமிழகம் முழுவதும் வறட்சி பாதித்த மாநிலமாக இருந்த நிலையில், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிர் துறந்திருந்த நிலையில், வேலையும் இல்லா மல், கூலியும் இல்லாமல் விவசாயச் தொழிலாளர்கள் மனம் வெதும்பியிருந்த சூழலில் இப்போராட்டம் துவக்கப்பட்டது ஒரு சரியான நேரமாக அமைந்தது.

“ஜனநாயக மத்தியத்துவம்” என்ற ஒரு வார்த்தை அறிவு ஜீவிகள் என்று சொல்லப் படுவோர் மத்தியில் உலா வருவது வழக்கம். பெரும்பான்மை முடிவிற்கு சிறுபான்மை கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதைத்தான் அப்படி சொல்வார்கள். இந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகூட சிலரால் ஏற்கத் தக்கதல்ல என்பது உண்மை தான். இதுவரையில் தமிழகத்தின் பல பகுதிகளில் நடந்து வந்துள்ள ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்பட்ட விதம் குறித்து, அதிலே சில குறிப்பிட்ட சமூகத்தினர் மாடு பிடிக்க அனுமதிக்கப்படாதது குறித்து, மாடு வளர்ப்பதே சில குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமே என்பது குறித்தெல்லாம் பல்வேறு விமர்சனங்கள் மற்றும் கருத்து மோதல்க ளெல்லாம் இருந்த பொழுதும் பெரும் பான்மையோர் ஜல்லிக்கட்டு தமிழர்களின் அடையாளம், பண்பாடு, உணர்வு என்பதை ஏற்றுக்கொண்டவர்களாகவே இருந்தனர். எனவே இந்த போராட்டத்திற்கு காரணமான கோரிக்கை பெரும்பான்மையோரின் கோரிக்கை யாக மாறியது.

“உழைப்பவன் ஒருவன் பயனடைபவன் ஒருவன்” என்று கூறுவார்கள். வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை கொடு என்று இளைஞர்கள் போராடும்பொழுது இவர்களுக்கு வேறு வேலையில்லை என சாலையோரம் செல்லும் இளைஞர்களே எகத்தாளம் செய்துவிட்டு செல்லும் காலத்தில், இளைஞர்கள் மற்றும் மாணவர்களால் துவக்கப்பட்ட இப்போராட்டம் அதுபோல் மற்றவர்களால் ஏளனம் செய்யப்படாமல் போனது குறித்தும், நாம் அந்த போராட்டத்தில் பங்கேற்கவில்லையெனில் நம்மை ஏனையோர் ஏளனமாக பார்க்கும் நிலை வந்துவிடுமோ என்ற குற்ற உணர்வை ஏற்படுத்துமளவிற்கும் போராட்டம் நடந்தது. ஆக போராட்டத்தில் பங்கெடுக்காதோர் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்துதல் அவசியமானதாகும் என்பது விளங்கும்.

“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன், ஆங்கோர் பொந்திடை வைத்தேன், வெந்து தணிந்தது காடு” என பாரதி குறிப்பிடுவான். நெருப்பு பட்டவுடன் பற்றிக்கொள்ளும் விதமாக அங்கே பட்ட மரம் இருந்ததால்தான் காடே வெந்தது, அதுவே பச்சை மரமாக

இருந்து வைக்கப்பட்ட நெருப்பின் அளவும் குறைவாக இருந்திருந்தால் நெருப்பு அவிந் திருக்கும் என்பதே உண்மை. இப்போராட் டத்திலும், பொதுமக்கள் மத்திய, மாநில அரசுகளின் தவறான நடவடிக்கைகளால் மனம் வெதும்பியிருந்தனர். நூறு டிகிரி செண்டிகிரேடு வெப்பம் வந்தால்தான் தண்ணீர் கொதி நிலையை அடையும் என்பது உண்மை. திடீரென நூறு டிகிரி வந்துவிடாது என்பதும் உண்மை. சிறிது சிறிதாக சூடேறி கொதி நிலையை நீர் அடைந்ததுபோல், மத்திய அரசின் பணமதிப்பு இழப்பு நடவடிக்கை யால், தான் உழைத்து ஈட்டிய பணத்தை வங்கியிலிருந்து எடுக்க முடியாதது, பல தொழில் பாதிக்கப்பட்டதால் வருமான இழப்பு ஏற்பட்டது, நீதிமன்ற உத்தரவு இருந்தபொழுது பாபர் மசூதியை இடித்தது, நீதிமன்ற உத்தரவு இருந்தும் கர்நாடக மாநில அரசு காவிரியில் தண்ணீர் தர மறுப்பதை மத்திய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடன் கண்டுகொள்ளாமல் இருந்தது, மாநில அரசில் நடைபெற்ற மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, அரசின் உயர் அதிகாரிகள் இல்லத்தில் எடுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய் பணம் உட்பட பல அருவருக்கத் தக்க செயல்களைக் கண்டு கொதித்திருந்த மக்களுக்கு ஜல்லிக்கட்டு பிரச்சனை நூறாவது டிகிரியாக மாறியது என்பதே எதார்த்தம்.

“காவல்துறை என்பது அரசின் அடக்கு முறைக் கருவி” என்பது மீண்டும் நிரூபண மாகியுள்ளது. இந்தப் போராட்டம் நடந்த பொழுது காவல்துறையில் பணிபுரியும் காவலர்களில் பலர் உணர்வு மேலிட்டதால் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். ஒரு காவலர் உணர்வு மேலிட்டு வெளிப்படையாக சீருடையில் வந்து தன் ஆதங்கத்தை கொட்டினார். போராட்டக்காரர்களும் தமக்கு வைத்திருந்த உணவை அங்கு காவலுக்கு வந்திருந்த காவலர்களுடன் பங்கிட்டுக் கொண்டனர். ஆனால் அரசு ஒரு முடிவெடுத்து போராட்டத்தை அடக்கவேண்டும் எனக் கூறியவுடன் காவல்துறையினர் நடந்துகொண்ட விதம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. காவலரே தீ வைப்பதையும், வாகனங்களை



அடித்து நொறுக்குவதையும், மூர்க்கமாக தாக்குவதையும் கண்ட மக்கள் ஏற்கனவே நடைபெற்ற கலவரங்கள் நடைபெற்ற விதம் அதனை காவலர்கள் அடக்கிய விதம் குறித்தும் அறிய வாய்ப்பு ஏற்பட்டது. காவல்துறை முடிவெடுத்தால் நல்லவர்கள் வீட்டிலிருந்து கஞ்சா எடுப்பது எப்படி என்பதை யூகிக்க முடிந்தது. சமூக விரோதிகள் போராட்டக் காரர்களுடன் கலந்துவிட்டதால் இப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய தாயிற்று என்று சொல்வதை சிறு குழந்தைகூட நம்ப மறுத்தது என்பது வேறு விசயம். காவலருக்குமான இழப்பை சரிசெய்திடத்தான் 2003ஆம் ஆண்டில் அரசு ஊழியர் - ஆசிரியர்கள் போராடினார்கள் என்பது தெரிந்தும், தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் மீது விபச்சாரத்திற்கு அழைத்ததாக வழக்கு பதிவு செய்ததும், 1988ஆம் ஆண்டு சென்னை மவுண்ட் ரோட்டில் குதிரைப் படையை வைத்து அடித்ததும் நினைவுக்கு வருவதை தவிர்க்க இயலவில்லை. அதேபோல் பணமதிப்பு இழப்பு எதிர்ப்பு நடவடிக்கைக் காக போராடிய மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மானபங்கப்படுத்தப்பட்டதும் மனதில் நிழலாடியது.

இப்போராட்டத்தில் பொதுமக்களின் பங்கேற்பு அற்புதமாக இருந்தது. போராட்டத் திற்கு ஆன செலவு குறித்தும் அதனை ஈடுகட்டிய விதம் குறித்தும் மிகவும் யோசிக்க வேண்டியுள்ளது. போராட்டத்தில் பங்கேற்ற அனைவரும் ஏதோ ஒரு வகையில் அதனை ஈடுகட்டினார்களென்றால் அதில் பங்கேற்கா தோர் கூட பல விதங்களில் உணர்வுபூர்வமாக உதவியுள்ளனர். அன்றாடம் டீ விற்றால்

மட்டுமே அன்றைய பொழுதை ஓட்ட முடியும் என்ற நிலையில் இருந்தவர் கூட தன் பங்காக நாளொன்றுக்கு மூன்று வேளை டீயை போராடும் மாணவர்களுக்கு காசு வாங்காமல் கொடுத்ததை காணமுடிந்தது. அன்றாடம் பிழைப்பு நடத்துவோர் கூட தன் வீட்டில் சமைத்து எடுத்துவந்து உணவை விநியோகித் ததையும் அதனையும் கூட எந்தவித பதட்டமு மின்றி போராடும் மாணவ இளைஞர்கள் பிரித்துக்கொடுத்த விதமும் பாராட்டும்படி இருந்தது சிறு துளி பெரு வெள்ளமாக மாறியதை உணர முடிந்தது.

இளைஞர்கள் என்றாலே கேலியும் கிண்டலும் ஆபாச சீண்டல்களும் இருக்கும் என்ற கற்பிதத்தை முன்பே மாணவர் மற்றும் வாலிபர் சங்க உறுப்பினர்கள் உடைத்துள்ள போதிலும், தற்பொழுது நடந்த போராட்டம் அப்படிப்பட்ட அமைப்பு சார்ந்தவர்களால் நடத்தப்பட்வில்லையெனினும் எந்தவித புகாருக்கும் இடமின்றி நடந்து முடிந்துள்ளது. பகல் இரவு என அனைத்து நேரத்திலும் ஆண் பெண் பேதமின்றி ஓரிடத்தில் கூடியிருந்ததோடு மட்டுமின்றி அதற்காக சென்ற பொழுதும்கூட எந்த இடத்திலும் கண்ணியம் தவறாமல் இளைஞர்கள் நடந்துகொண்டதும் ஆகப் பெரிய பெருமையாக போற்றப்படுகின்றது.

வன்முறை என்ற ஆயுதத்தை கையில் எடுக்காமல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல், பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிக்காமல் தமிழக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் நடத்திய போராட்டம் ( இறுதி நாள் நிகழ்வு காவல்துறை ஏற்படுத்தியது ) உலகில் சமூக நலனுக்காய் போராடுபவர் களுக்கு பல படிப்பினைகளை கற்றுத் தந்துள்ளது. அனைத்தையும் எடுத்துச் சொல்வது இயலாததாகும். அதே நேரம் ஆட்சியாளர் களுக்கும் பாடம் நடத்தியுள்ளது. ஆட்சி யாளர்கள் நடத்தும் அராஜகங்களை மக்கள் கண்டுகொள்வதில்லை என நினைத்தால அது தவறு என்பதையும், வாய்ப்புக்காக காத்திருக் கின்றனர் என்பதையும், அப்படியொரு வாய்ப்பு வரும்பொழுது அதுவரையில் போட்டு வந்த வேசம் கலைந்துவிடும் என்பதை யும் உணர்ந்து செயல்படுவதே நல்லது. இது ஆட்சியில் இருப்பவர்களுக்கும் ஆட்சிக்கு வரத்துடிப்பவர்களுக்கும் பொருந்தும்.

இனி நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டுகள் அனைத்திலும் சில குறிப்பிட்ட சமூகத்தினர்கள் ஜல்லிக்கட்டில் மாடு பிடிக்கும் பொழுது குறிப்பிட்ட சமூகத்தினரின் மாட்டை பிடித்தால் பிரச்சனை ஏற்படும் என்ற எண்ணத்தை மாற்ற வேண்டிய கட்டாயம் இன்றைக்கு தமிழர்களின் கலாச்சாரத்தை மீட்டெடுக்கப் போராடிய அனைவருக்கும் இருக்கின்றது. அப்படி மாற்றம் காணவில்லையெனில் இதுவரை ஜாதி, மதம் கடந்து தமிழன் என்ற உணர்வோடு உலகம் முழுவதும் போராடியோரையும் அதற்கு ஆதரவாக நின்ற பிற தேச மற்றும் இன மக்களை அவமானப்படுத்துவதாகவும், தமிழர்களின் நம்பகத் தன்மை குறித்த சந்தேகம் ஏற்படுத்துவதாகவும் அமைந்துவிடும்.

அதே நேரம் இப்படிப்பட்ட ஒரு போராட்டம் அரசின் அடக்குமுறையால்தான் முடித்துவைக்கப்பட்டது என்பதையும் போராடியவர்கள் உணர்வார்கள் என நம்பு வோம். எனெனில் தமிழகத்தை வாட்டி வதைக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு இப்பொழுது நடைபெற்ற போராட்டத்தின் மூலம் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சூழலில் மீண்டும் அதற்காக இவர்கள் கூடிவிட்டால் என்ன செய்வது? எனவே அவ்வாறு நடைபெறாமல் தவிர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இறுதி நாளன்று திட்டமிட்டு நடத்தப்பட்ட வன்முறையாகும். ஆகப்பெரிய பாடம் என்பது அதிகார வர்க்கத் தில் இருப்போரும் அதற்கு வரத் துடிப்போரும் மக்கள் விழிப்புணர்வு பெறுவதை, தான் அனுபவித்துவரும் துன்பங்களுக்கான உண்மை யான காரணத்ததை உணர்ந்து கொள்வதை விரும்பமாட்டார்கள் என்பதே எதார்த்த உண்மையாகும். ஆனாலும் நீறுபூத்த நெருப்பாக இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கனன்றுகொண் டிருக்கும் நெருப்பு சுயநல சக்திகளின் வாழ்வை முற்றிலும் எரிக்கும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

**நாகை ஏ.ட்டீ.ஏ.**

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய போராட்டத்தை ஆதரித்து அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், மாணவர்களின் போராட்டத்தை ஆதரித்தும், 'பீட்டா' அமைப்பை தடை செய்யக் கோரியும் நடைபெற்ற போராட்டங்களில் அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள், இளைஞர்கள், பெண்கள் என பல்வேறு தரப்பினரும் குதித்தனர். தமிழகம் முழுவதும் தமிழ்நாடு அரசு ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக...

**புதுக்கோட்டை**

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வட்டத் தலைவர் மதன்குமார் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டத் தலைவர் கே.நாகராஜன், செயலாளர் ஆர்.ரெங்கசாமி மற்றும் நிர்வாகிகள் சி.கோவிந்தசாமி, எஸ்.நாகராஜன், ரமா.ராமநாதன், துரை. அரங்கசாமி, செல்வமீனாள், மு.முத்தையா, ஆர்.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பேசினர். இந்த ஆர்ப்பாட்டங்களில் ஏராளமான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

**தருமபுரி**

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க நிரந்தர சட்டம் கோரி போராடும் மாணவர்கள், இளைஞர்களோடு நம்பிக்கையளிக்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனைக்கு சுமுக தீர்வை ஏற்படுத்த வேண்டுமெனவும், காவல்துறையின் தடியடி வன்முறை நடவடிக்கைகளை கைவிட வேண்டுமெனவும், நிரந்தர சட்டம் இயற்ற வேண்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆர்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இப்போராட்டத்திற்கு மாவட்டத் தலைவர் எம். சுருளிநாதன் தலைமை வகித்தார் மாவட்டசெயலாளர் ஏ.சேகர் மாவட்ட துணைத் தலைவர்கள் யோகராசு சிவப்பிரகாசம் மாவட்ட இணைச் செயலாளர்கள் காவேரி பி.எஸ். இளவேனில் ஆகியோர் உரையாற்றினர்.

**நாகப்பட்டினம்**

தமிழ்நாடு தனியார் கல்லூரி அலுவலர் சங்க நாகப்பட்டினம் கிளையின் சார்பில் நாகை அ.து.ம.மகளிர் கல்லூரி வளாகம் முன்பு ஜல்லிக்கட்டு வேண்டி போராடிய மாணவர்கள் மீது காவல்துறை தாக்கியதைக் கண்டித்து திருச்சி மண்டலத் தலைவர் எஸ்.ராஜேந்திரன் தலைமையில் 25.01.17 அன்று மதிய உணவு இடைவேளை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன்சேரல் மற்றும் மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அரசு ஊழியர் சங்க நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்துகொண்டனர். செயற்குழு உறுப்பினர் கண்ணன் நன்றி கூறினார்.

**திருச்சி**

திருச்சி வட்டக் கிளை II சார்பில் மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரம் பணிகள்) அலுவலகம் முன்பு மாலை 5.50 மணியளவில் வட்டத் தலைவர் பழனிச்சாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் வட்டச் செயலாளர் கேசவமூர்த்தி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்டத் தலைவர் இளங்கோவன், மாவட்ட துணைத் தலைவர் கென்னடி சிறப்புரை ஆற்றினார்கள். பொது சுகாதாரத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்க பொறுப்பாளர் அறவாழி,

சுகாதார ஆய்வாளர்கள் சங்க பொறுப்பாளர் சுப்ரமணியன், பொது சுகாதாரத் துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க சுமார் 100 பேர் கலந்துகொண்ட ஆர்ப்பாட் டத்தின் இறுதியில் வேல்முருகன் நன்றி கூறினார்.

அதுபோல் இதே கோரிக்கைக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சி வட்டக் கிளை I சார்பில் திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) அலுவலகம் முன்பு மாலை 6.00 மணியளவில் விவேகானந்தன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட் டத்தில் வட்ட செயலாளர் பால்பாண்டியன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட தலைவர் இளங்கோவன், மாவட்ட இணைச் செயலாளர் எலிசபெத் சிறப்புரை ஆற்றி னார்கள். பட்டு வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாநில செயலாளர் ரபியுதீன், சுப்ரமணியன், வாழ்த்துரை வழங்கினார்கள். ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு துறையை சார்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி வட்டக்கிளை-Iல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சொக்கலிங்கம் தலைமை தாங்க மாவட்ட செயலாளர் இளங்கோவன் சிறப்புரையாற்றினார். திருச்சி வட்டக்கிளை-IIல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பழனிச்சாமி தலைமை தாங்க மாவட்ட இணை செயலாளர் குழந்தைவேல் சிறப்புரை யாற்றினார்

மண்ணச்சநல்லூர் வட்டக்கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சுவாமிநாதன் (வட்டார வளர்ச்சி அலுவலர்), தலைமை தாங்க மாவட்ட துணைத் தலைவர் கென்னடி சிறப்புரையாற்றினார். துறையூர் வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட செயலாளர் கந்தசாமி தலைமை தாங்க, மாவட்ட பொருளாளர் பழனியப்பன், மாவட்ட துணைத்தலைவர் கென்னடி ஆகியோர் சிறப்புரையாற்றினர். முசிறி வட்டக் கிளையில் தாத்தையங்கார் பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக் கிளை தலைவர் சிவக்குமார் தலைமை தாங்க வட்ட செயலாளர் நாகராஜன் சிறப்புரையாற்றினார்.

தொட்டியம் வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு குணசேகரன் தலைமை தாங்க, வட்டக் கிளை தலைவர் சந்திரகுமார் துணைத் தலைவர் சுவாமிநாதன் அனைத்து துறை ஓய்வூதிய சங்க பொறுப்பாளர் தங்கராசு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். லால்குடி வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட் டத்திற்கு தௌலத் தலைமை தாங்க வட்ட செயலாளர் ஜெயராஜ் சிறப்புரையாற்றினார். மணப்பாறை வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பாக்கியசெல்வம் தலைமை தாங்க மருதுபாண்டியன் சிறப்புரையாற்றினார்.

மாவட்டம் முழுவதும் அனைத்து வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு துறையை சார்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் கலந்துகொண்டனர்.

### தூத்துக்குடி

வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பு, ஜல்லிக்கட்டு நடத்த நிரந்தர சட்டம் கொண்டு வர வேண்டி தொடர்ந்து போராடிவரும் மாணவர்களின் போராட்டத்தினை மத்திய, மாநில அரசுகள் காவல் துறையை பயன் படுத்தி, மாணவ மாணவிகள் மீதி சட்டத்திற்கு புறம்பாக வன்முறையை கட்டவிழ்த்து விட்டு காந்திய வழியில் நடந்த அறப்போரினை ஆங்கிலேய கம்பெனி ஜெனரல் டயர் போன்று அடக்க செயல்பட்டதை வன்மையாக கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டதில் தமிழ்நாடு நில அளவை துறை அலுவலர் ஒன்றிப்பு மாவட்ட தலைவர் அண்ணாமலை பரமசிவன் தலைமை வகித்தார். அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்கள் 50 பெண்கள் உட்பட 150 பேர்கள் கலந்துகொண்டு கண்டன கோஷம் எழுப்பினார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தூத்துக்குடி மாவட்ட செயலாளர் என்.வெங்கடேசன்,

தூத்துக்குடி மாவட்ட துணை தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். தூத்துக்குடி கிழக்கு வட்ட செயலாளர் பி.முருகன் நன்றி கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் கலையரசன் தலைமையில் ஜாக்டோ ஜியோ அமைப்பு சார்ந்த துறைவாரி நிர்வாகிகள் கண்டன குரல் எழுப்ப, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைத்து வட்ட கிளைகளிலிருந்தும் 100 பெண் ஊழியர்கள் உட்பட 300க்கும் மேலானவர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம்**

மேட்டூர் அணை வட்டக் கிளை சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தலைவர் கே.கலையரசு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் தலைவர் பி.சண்முகம் கண்டன உரையாற்றினார். சத்துணவு அமைப்பாளர் திருமதி. லீலா நன்றி கூறினார்.

**மதுரை**

தமுக்கம் எதிரில் உள்ள நேரு சிலை அருகில் மாவட்ட செயலாளர் சு.கிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாநிலத் தலைவர் சுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் வேல்மணி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினார்கள்.

**விழுப்புரம்**

கள்ளக்குறிச்சி வட்டக்கிளை சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் ஆகிய இரண்டு இடங்களில் போராட்டம் நடைபெற்றது. வட்ட துணைத் தலைவர் பி.முத்து தலைமை தாங்கினார். சுகாதார ஆய்வாளர் சங்க மாவட்டத் தலைவர் கொளஞ்சியப்பன்வேலு, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநிலச் செயலாளர் ரஹீம், சாலைப் பணியாளர் சங்க வட்டச் செயலாளர் சாமிதுரை உள்ளிட்ட துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் பி.ரவி, செயலாளர் கே.மகாலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

**கிருட்டிணகிரி**

ஓசூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு இடங்களில் ஆர்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பி.சந்திரன் தலைமையேற்றார். ஜி.முருகன் (TNCTSA), எம்.சின்னப்பன் (TNNMEA), எம்.பெர்னாட் (TNAWHA), சுரேஷ்குமார் (TNMCSA), வி.கருப்பசாமி (PHDOA) ஆகியோர் வாழ்த்தி பேசினர். TNSEA மாநில துணைத் தலைவர் ஆர்.நடராஜன் சிறப்புறையாற்றினர். பங்கேற்ற அனைவருக்கும் மாவட்டச் செயலாளர் சி.பி.ஜெயராமன் நன்றி கூறினார். ஆர்பாட்டத்தில் 286 பேர் பங்கேற்று சிறப்பித்தனர்.

**திண்டுக்கல்**

பழனியில் 19.1.17 அன்று பேரணி நடைபெற்றது. வி.வேலுச்சாமி தலைமை தாங்கினார். வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மங்களபாண்டியன் வாழ்த்தி பேசினார். சத்துணவு ஊழியர் சங்கத்தின் இளங்கோ, ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கத்தின் என்.சின்னசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர். என்.ரமேஷ் நன்றி கூறினார்.

**தருமபுரி**

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சுருளிநாதன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி, மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணை செயலாளர் யோகராசு, நிர்வாகிகள் வெங்கடேசன், சுந்தரராஜன், கார்த்திகேயன் ஆகியோர் பேசினர்.

பாப்பிரெட்டிபட்டியில் சண்முகம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் பேசினார். அரூர் வட்டத் தலைவர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் பி.எஸ். இளவேனில் பேசினார். நல்லம்பள்ளியில் வட்டத் தலைவர் மோகன் தலைமவகித்தார். மாவட்ட துணைத் தலைவர் எம். சிவப்பிரகாசம் பேசினார்.

பென்னாகரத்தில் வட்டத் தலைவர் லட்சுமி தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் வடிவேல் பேசினார். காரிமங்கலத்தில் வட்டத் தலைவர் கோபால் தலைமை வகித்தார் மாவட்ட இணைச் செயலாளர் காவேரி பேசினார். பாலக்கோட்டில் வட்டத் தலைவர் குணசேகரன் தலைமை வகித்தார்.

### திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வியாழனன்று ஜனவரி 19 ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருவள்ளூர் வட்ட செயலாளர் பாண்டுரங்கன் தலைமை தாங்கினார்.இதில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜா.வி.அருள் டேனியேல், மாவட்ட நிர்வாகிகள் மெல்கிராஜாசிங், ரமேஷ், வரதராஜன், தாமோதரன், நட்ராஜ் உட்பட பலர் கண்டனவுரையாற்றினர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அனைத்து வட்டாச்சியர் அலுவலகங்கள் முன்பும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. மேலும் திருவள்ளூர், வடமதுரை, ஆரணி உள்ளிட்ட பல இடங்களில் மாணவர்கள் இளைஞர்கள் தன்னெழுச்சியாக போராட்டங்கள் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாகை

மாவட்ட மையம் சார்பில் மாவட்ட ஆட்சியரகத்தில் 19.01.17 மதியம் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரை யாற்றினார். நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் சிறப்புரையாற்றினார். நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் நன்றி கூறினார்.

தரங்கம்பாடி வட்ட மையம் சார்பில் செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப் பாட்டத்திற்கு வட்டத் தலைவர் எம்.தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.தியாகராஜன் சிறப்புரையாற்றினார். வட்டச் செயலாளர சி.வாசுகி நன்றி கூறினார். இரண்டு அலுவல கங்களிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 80 பெண்கள் உட்பட 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

18.01.17 அன்று நாகையில் நடைபெற்று வரும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போராட் டத்திற்கு நாகை மாவட்ட மற்றும் வட்ட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் நேரில் சென்று ஆதரவு தெரிவித்தனர்.

மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்ட இணைச் செயலாளர் டி.இளவரசன், நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிர மணியன், வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், செயற்குழு உறுப்பினர்கள் பிரபாகரன் மற்றும் மோகன் ஆகியோர் சென்று ஆதரவு தெரிவித்தனர்.

### வடசென்னை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 350 பேர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைலவர் ம.அந்தோணிசாமி தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் தி.கலைசெல்வி, முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.எஸ்.அப்பர், எஸ்.ஏ.வெற்றிராஜன் மற்றும் மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.பிரபுராம், வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கே.சி.ராம்குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவாக குறளகம் பகுதி செயலாளர் த.ஏழுமலை நன்றி கூறினார். இதில் குறளகம், தங்கசாலை, எழும்பூர் பகுதிக் குழு நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

அம்பத்தூர்-ஆவடி பகுதிக் குழுவில் உணவு இடைவேளையில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஐடிஐ சங்க கிளைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஐடிஐ சங்க பொதுச்

செயலாளர் ரமேஷ் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் பி.பத்மநாபன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் 35 பெண் ஊழியர்கள் உட்பட 80 பேர் பங்கேற்றனர்.

வில்லிவாக்கம் பிடிஓ அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ரமேஷ், சந்திரசேகர், விஜயகுமார், பத்மநாபன், முருகன், லோகநாதன் ஆகியோர் உரையாற்றினர். இதில் 45 பெண் ஊழியர்கள் உட்பட 80 பேர் பங்கேற்றனர்.

**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கத்தின்** சார்பில் 20-1-2017 மாலை நெடுஞ்சாலைத் துறை



அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட தலைவர் எம். மகேந்திரன் தலைமை வகித்தார் மாவட்ட செயலாளர் பழனிச்சாமி மாவட்ட பொருளாளர் எ.சிங்கரார், மாவட்ட இணைச் செயலாளர் எம்.முருகையன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ❖

## வாசகர் கடிதம்

ஜனவரி 2017 இதழில் "மா" நிலம் போற்றும் மாநாடுகளின் எழிச்சி படங்கள் அனைத்தும் அருமை, இதழின் உள்ளே சில படங்கள் இடத்தை நிரப்ப இழுத்து வைத்ததுபோல தெளிவற்று உள்ளது. மக்களுக்காக போராடும் தினம் அனைத்துமே "அரசு ஊழியர் தினமே". தரணியில் எது நன்நாள்..., வேண்டாம் இம் மாதிரி முன்மாதிரி... அனைத்து கவிதை கட்டுரைகளும் நன்றாக உள்ளது. பணிச்சுமை மட்டுமல்ல பனியும் சுமையாக இல்லாமல் இருக்க காமராஜ் அவர்களின் தடுக்கும் வழிகள் பயன் உள்ளதாக இருந்தது.

- **சி.பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்



## பணிக் காலத்தில் இறந்து போன அரசு ஊழியரின் இரண்டாம் தார 'மனைவியின்' மகன் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு கோர முடியுமா?

பி.மலையப்பன் என்பவர் தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் துறை ஆய்வாளராகப் பணியாற்றி வந்தபோது அவர் சரோஜா என்பவரைத் திருமணம் செய்திருந்தார். அத் திருமணத்தினால் அவருக்குக் குழந்தை இல்லாததால், அவர் தனது மனைவி சரோஜாவின் உடன் பிறந்த தங்கையை அவரின் சம்மதத்துடன் இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில், அவர் 8.4.2008 அன்று ஒரு சாலை விபத்தின் காரணமாக மரணம் அடைந்தார். அவரது 2வது மனைவி மூலம் பிறந்த அவரது மகன் முத்துராஜ் அவரது தகப்பான் பணிக் காலத்தில் இறந்து போனதால், கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கும்படிக் கேட்டு அவர் சார்பாக அவரது பெரிய தாயார் அதாவது இறந்து போன மலையப்பனின் முதல் மனைவி தூத்துக்குடி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்தார்.

அதனைப் பரிசீலித்த தூத்துக்குடி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது 2வது தாரமாகத் திருமணம் செய்து கொண்ட மனைவி மூலம் பிறந்தவருக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழஙக முடியாது என்று தெரிவித்து அவரது விண்ணப்பத்தை 26.11.2008 அன்று நிராகரித்து உத்தரவிட்டார். இதை எதிர்த்து மலையப்பனின் முதல் மனைவியும், இரண்டாம் தாரத்தின் மகன் முத்துராஜூவும் தமிழ்நாடு மாநில இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் அவர்களுக்கு மேல் முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பித்தனர்.

தூத்துக்குடி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் உத்தரவு சரியானது தான் என்று தெரிவித்து அவர்களது மேல் முறையீட்டு விண்ணப்பத்தை மாநில இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் நிராகரித்து உத்தரவிட்டார்.

அதனை எதிர்த்து முத்துராஜ் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்தார். மனுவில், அவர் தனது பெரிய தாயார் மற்றும் தனது தாயார் அனைவரும் ஒரே வீட்டில் வசிப்பதாகவும், ஆதலால் தனக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரியிருந்தார். அவரது நீதிப் பேராணை மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி புஷ்பா சத்திய நாராயணா அளித்த தீர்ப்பின் விவரம் வருமாறு:

பணிக் காலத்தில் இறந்து போன அரசு அலுவலரின் இரண்டாம் தார "மனைவியின்" மகன் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு கோர முடியாது. இரண்டாம் தாரத்தின் மூலம் பிறந்த வாரிசுகளுக்குரிய சொத்துரிமைக்கும், அவர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் வித்தியாசம் உள்ளது. தனிநபர் சட்ட சிறப்பு விதிகளின்படி, சில விசேட சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அரசு அலுவலர் ஒருவருக்கு இரண்டாம் திருமணத்திற்கு நிர்வாகம் அனுமதி அளித்திருந்தால் மட்டுமே, இரண்டாம் தார மனைவிக்கும், அல்லது அவரது வாரிசுக்கும் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிப்பது பற்றி பரிசீலனை செய்ய முடியும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கருணை அடிப் படையில் வேலை வாய்ப்பு பெறுவதையும், சொத்துக்களை மரபு வாரிசு அடிப்படையில் உரிமையாக்கிக் கொள்வதையும் தொடர்புபடுத்த முடியாது. மேலும், அதனை ஒன்றுக்கொன்று சரி சமமாகக் கருதவும் முடியாது. கருணை அடிப் படையில் அரசு வேலை பெறுவதை சொத்துக் களை உடைமை மாற்றம் செய்வது போல் கருத இயலாது.

சட்டத்திற்கு முரணான வழியில் பிறந்த குழந்தைகளுக்கு சொத்துரிமையை மரபு வாரிசு உரிமையின் அடிப்படையில், சட்டப்படி பிறந்த குழந்தைகளுக்குரிய உரிமையைப் போல் மாற்றம் செய்ய முடியும் என்றாலும், அவர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிப்பவர் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிப்பதை சட்டத்திற்கு முரணான வழியில் பிறந்த குழந்தைகளுக்கு அனுமதிக்க வில்லை.

ஒருவருக்கு ஒரு தாரம் என்பது தான் அரசாங்கத் தின் கொள்கையாகும். இந்தக் கோட்பாடு கால ஓட்டத்தின் பல்வேறு சோதனைகளையும் தாண்டி இன்றும் எவராலும் முறியடிக்கப்படாமல் நிலைத்து நிற்கிறது. ஆகவே, மேற்கண்ட காரணங்களினால் மனுதாரரின் கோரிக்கையை தள்ளுபடி செய்து நீதிபதி புஷ்பா சத்தியநாராயணா தீர்ப்பளித்தார். (W.P.(MD)No.3502/2011 dt.27.04.2016).

தீர்ப்பு சேகரிப்பு : குணாஜி

# இன்னுமொரு வரலாறு மிச்சமிருக்கு!

## (ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பின் நடவடிக்கைகள்)

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒற்றுமையினால் பல உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்த வரலாற்று உண்மையாகும். 1977, 1988, 2002, 2003 மற்றும் பிப்ரவரி 2016 போராட்டம் என பல்வேறு காலக் கட்டங்களில் நடைபெற்ற வரலாற்று சான்றுகளாக அப்போராட்டங்கள் திகழ்ந்தன. மத்திய அரசுக்கு நிகரான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கு கிடைக்கப் பெற்றதும், அவ்வப்போது அகவிலைப்படி உயர்வினை நாம் பெற்று வருவதும் இப்போராட்டங்களினால் தான். அரசு ஊழியர்- ஆசிரியர் சமூதாயம் அடைந்த நன்மைகள் இப் போராட்டங்களால் ஏராளம்.

தற்போது 01.01.2016 முதல் மைய அரசானது தனது ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்கள் மாற்றியமைத்து அதன் பயனை மைய அரசு ஊழியர்கள் துய்த்து வருகின்றனர். அதனையொட்டி சட்டீஸ்கர், உத்திரப் பிரதேசம், குஜராத் மாநிலங்களில் மைய அரசின் ஊதிய விகிதங்கள் அமல்படுத்தப்பட்டு அவர்களும் அதன் பலனை அனுபவித்து வருகின்றனர். 2016ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலின் போது அரசியல் கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்றால் உடனடியாக ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 01.01.2016 முதல் மைய அரசு ஊழியர்கள் பெற்றுவரும் ஊதிய விகிதங்கள் மாநில அரசின் ஊழியர்களுக்கு அமல்படுத்தப்படும் என தங்களது தேர்தல் அறிவிக்கையில் அறிவித்தன. மேலும் 2003-ம் ஆண்டு ஏற்பட்ட போராட்டக்களமானது ஓய்வூதிய பலன்கள் மீது மாநில அரசின் தாக்குதலின் பேரில் ஏற்பட்டதாகும். அப்போது தமிழக அரசானது 01.04.2003 முதல் அரசுப் பணியில் சேரும் ஊழியர்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதியத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இதில் யோசிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் மைய அரசானது 01.01.2004 பின்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு தான் புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தினை அமல்படுத்தியது. அந்த அரசாணைகளின் தாக்கம் 2003-ம் ஆண்டில் நடைபெற்ற அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டமானது ஜாக்டோ-ஜியோ மற்றும் கோட்டோ-ஜியோ பங்களிப்பினால் அரசாங்கம் திணறியது. விளைவு 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அப்போதைய தமிழக ஆளும் கட்சியான வெற்றி வாய்ப்பினை இழந்து, 2006 மே மாதம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஆட்சியையும் இழந்தது. இது நமக்கு தெரிந்த கண்கூடான வரலாற்று உண்மை. இது பன்னாட்டு தொழிலாளர் மன்றத்தின் பார்வையினையே உற்று நோக்க வைத்தது.

அலுவலர்-ஆசிரியர் போராட்டம் ஒற்றுமையாக களம் அமைத்து போராடினால் இறுதி வெற்றி காணும் போராட்டம் தான் என்பது கடந்த கால வரலாறு. எவ்வளவுதான் அரசு தன் அதிகார சக்தியை கொண்டு அராஜகம் செய்தாலும் ஒற்றுமை சக்திக்கு முன்னர் தோற்று போய்விடும் என்பதும் சரித்திரகால வரலாறு. தற்போது மைய அரசின் ஊதியக்குழு பரிந்துரைகளை நம்முடைய தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். இது ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்ப்பார்ப்பினை 100 சதவீதம் மேலும் கூட்டியுள்ளது. மேலும் நாலரை லட்சம் ஊழியர்கள் புதிய பங்களிப்பு திட்டத்தினால் அவதிப்படுகின்றனர். அரசுப் பணிக்கு முக்கிய அம்சமாக திகழும் ஓய்வூதியத்தினை மீட்டெடுப்பது என்பது முக்கியமான காலத்தின் அவசியம்.

இதனையெல்லாம் கருத்தில் கொண்டுதான் தலைமைச் செயலகச் சங்கமானது கடந்த 29.09.2016 அன்று பல்வேறு அரசு ஊழியர் - ஆசிரியர் அமைப்புகளுடன் ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தியது. அதன் தொடர்ச்சியாக 27.12.2016 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்பு கூட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட அமைப்புகள் கலந்து கொண்டு தங்கள் கருத்தாக்கங்களை தெரிவித்தன. அதன் பிறகு 10.01.2017 அன்று

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் நடந்த ஜாக்டோ-ஜீயோ அமைப்பில் கீழ்க்கண்ட 63 அமைப்புகள் கலந்து கொண்டு தங்களது கருத்தினை தெரிவித்தன.

**ஜாக்டோ**

1) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம்

2) தமிழகத் தமிழாசிரியர் கழகம்

3) தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்

4) தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம்

5) தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம்

6) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கழகம்

7) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

8) தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

9) தமிழக ஆசிரியர் கூட்டணி

10) தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

11) தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

12) தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்

13) தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம்

14) பதவி உயர்வு பெற்ற பட்டதாரி மற்றும் தமிழாசிரியர் கழகம்

15) தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி சங்கம்

16) தமிழ்நாடு மேல்நிலை தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம்

17) தமிழ்நாடு உயர்நிலை -மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் சங்கம்

18) தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் கழகம்

19) தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் இயக்குநர் சங்கம்

20) தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்கம்

21) தமிழ்நாடு அனைத்து ஆசிரியர் நலச் சங்கம்

22) தமிழ்நாடு கலை ஆசிரியர் சங்கம்

23) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு

24) பதவி உயர்வு பெற்ற முதுகலை பட்டதாரி ஆசிரியர் சங்கம்

25) தமிழக இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் மன்றம்

26) தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்

27) தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலை கணினி ஆசிரியர்கள் சங்கம்

**ஜியோ**

28) தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம்

29) தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

30) தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம்

31) தமிழ்நாடு அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படைப் பணியாளர் சங்கம்

32) தமிழ்நாடு அனைத்துப் பல்கலைக்கழக அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு

33) பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம்

34) சென்னைப் பல்கலைக்கழக பணியாளர்கள் சங்கம்

35) சென்னைப் பல்கலைக்கழக டாக்டர் அம்பேத்கர் SC/ST ஊழியர் நலச் சங்கம்

36) தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

37) மதராஸ் உயர்நீதிமன்ற மற்றும் மதுரைக் கிளை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் சங்கம்

38) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஊழியர் சங்கம்

39) தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கம்

40) அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை பணியாளர் சங்கம்

41) தமிழ்நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர்கள் சங்கம்

42) தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

43) தமிழ்நாடு வட்டார சுகாதார மேற் பார்வையாளர்கள் (ம) சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

44) தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அடிப்படைப் ஊழியர் சங்கம்

45) தமிழ்நாடு அரசு பொது சுகாதாரத் துறை சமுதாய / பகுதி / கிராம செவிலியர்கள் கூட்டமைப்பு

46) தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம்

47) ஜாஸ்மின்ஸ் இயக்கம்

48) தமிழ்நாடு ஊரக வளர்ச்சி ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் சங்கம்

49) தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை தொழில்நுட்பப் பணியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு

50) தமிழ்நாடு பேரூராட்சித் துறை பணியாளர் சங்கம்

51) தமிழ்நாடு அரசு தற்காலிக இளநிலை உதவியாளர் (ம) உதவியாளர் சங்கம்

52) தமிழ்நாடு பொது சுகாதாரத் துறை அமைச்சுப் பணி அலுவலர் நலச் சங்கம்

53) தமிழ்நாடு பொது சுகாதாரத் துறை கொசு ஒழிப்பு பணியாளர் சங்கம்

54) தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகம்

55) தமிழ்நாடு ஆசிரியர் சங்கம்

56) தமிழ்நாடு இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம்

57) தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கம்

58) பதவி உயர்வு பெற்ற பட்டதாரி மற்றும் தமிழாசிரியர் கழகம்

59) தமிழக ஆசிரியர் மன்றம்

60) அனைத்து ஆசிரியர்கள் முன்னேற்ற கழகம்

61) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

62) தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம்

63) தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம்

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டன.

1) "ஜாக்டோ-ஜியோ" கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் தலைமைச் செயலாளர் அவர்களும் நேரம் ஒதுக்கித் தர வேண்டும்.

2) தமிழகத்தினை 140 ஆண்டுகளுக்குப் பிறகு வரலாறு காணாத வறட்சி ஆட்கொண் டுள்ளது. வறட்சியின் கோரப்பிடியில் சிக்கி, தங்களது வயல்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் நீரின்றி வாடுவதைக் கண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மரணமடைந்துள் ளனர். தமிழக அரசு விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணத் தொகையினை அறிவித்துள்ளது. அரசின் துயர்துடைக்கும் நடவடிக்கையில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திச் செயல்பட்டுவரும் இந்த வேளையில், தங்களது ஒருநாள் ஊதியத்தினை வழங்குவதற்கு "ஜாக்டோ-ஜியோ" கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

3) மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை மாநில அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் ஆகியோருக்கும் 1.1.2016 முதல் வழங்கும் வகையில் உடனடியாக மாநில அரசின் எட்டாவது ஊதியக் குழுவினை அமைக்க வேண்டும். மேலும், மாநில அரசின் எட்டாவது ஊதியக் குழுவினை அமல்படுத்துவதற்கு முன்னர் உடனடியாக 20 விழுக்காடு இடைக்கால நிவாரணத்தினை அறிவித்திட வேண்டும்.

4) தமிழக அரசு எட்டாவது ஊதியக் குழு வினை அமைத்து, நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஏற்கெனவே அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாடுகளையும் அவர்களுக்கு மத்திய

அரசுக்கு இணையான பணியிடத்திற்கான ஊதியத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

*5) 1-4-2003க்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்தோருக்கும் பழைய ஒய்வூதியத் திட்டத்தினையே தொடர்வதற்கான பரிந்துரை களை வழங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் பணி நீட்டிப்புக் கால மானது கடந்த 26.12.2016 அன்றுடன் முடிவடைந்துள்ள நிலையில், மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் வண்ணம், 1.4.2003க்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்த அனைவருக்கும் பழைய ஒய்வூதியத் திட்டத்தினையே தொடர்வதற்கான பரிந்துரை யோடு, வல்லுநர் குழுவானது தனது அறிக்கையினை விரைவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்க வேண்டும்.*

இக்கூட்டமைப்பின் அடுத்தகட்ட கூட்டம் கூடிய விரைவில் நடைபெறவுள்ளது.

*அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து சந்தித்த அனைத்து போராட் டங்களும் வரலாற்றை திரும்பிப் பார்க்க வைத்த போராட்டங்களாகும். 1977, 1988, 2003 போராட்டங்கள் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அரசின் அடக்குமுறைகளை உடைத்தெறிந்து உரிமைகளை வென்றெடுத் ததை கட்டியங்கூறும் வரலாற்று நிகழ்வு களாகும். அப்போது ஒன்று திரண்டு எழுந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் போல் மீண்டும் ஒரு போராட்டத்திற்கு அரசு நம்மை நிர்ப்பந்திக்க நேர்ந்தால் இன்னுமொரு வரலாற்றை எழுத வேண்டிய முக்கிய பணி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களாக பணிபுரியும் நம் அனைவருக்கும் உண்டு. அதனால் நம் உரிமைகளை வென்றெடுக்க நாம் தயாராவோம்!*

**ஜெ. கணேசன்**
*தலைவர்,*
*தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம்,*
*மற்றும் ஒருங்கிணைப்பாளர்,*
*ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு*

மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகைகள்

# மத்திய அரசு கொள்கையில் நீதிமன்றம் தலையிட முடியாது உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

*“**சி**வில் சர்வீஸ் தேர்வுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு அல்லது சலுகைகள் வழங்குவது அரசின் கொள்கை. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது” என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*பொதுப் பிரிவைச்சேர்ந்த மாற்றுத் திறனாளிகள், சிவில் சர்வீஸ் தேர்வுகளை எழுதும் வாய்ப்பு 4-ல் இருந்து 7ஆக உயர்த்தப்பட்டது. இது கடந்த 2007ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. அதேபோல் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த (ஓபிசி) மாற்றுத் திறனாளிகளுக்கு 7 வாய்ப்பில் இருந்து 10 முறை தேர்வு எழுத வாய்ப்பளிக்க வேண்டும் என்று சென்னை, டெல்லி உயர் நீதிமன்றங்கள் உத்தரவிட்டிருந்தன.*

*இந்த உத்தரவுகளை எதிர்த்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கை உச்ச நீதிமன்ற நீதிபதி ரஞ்வக் கோகாய், அசோக் பூஷன் ஆகியோர் 24.1.2017 அன்று அளித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது,*

*சிவில் சர்வீஸ் தேர்வுகளை எழுதும் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சலுகைகள் வழங்குவது அரசின் கொள்கை. இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது. அரசு கொள்கை தன்னிச்சையாகவோ, மனம்போன போக்கிலோ இருந்தால் மட்டுமே, அந்த விஷயத்தில் நீதிமன்றம் தலையிட முடியும். தவிர பல்வேறு காரணிகளைக் கவனத்தில் கொண்டு, பொதுப் பிரிவு மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான சலுகைகளை அரசு முடிவெடுத்துள்ளது. இது அரசின் கொள்கை. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது.*

*இவ்வாறு நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.*

❖

# இந்த நோய்க்கு மருந்து எங்கிருக்கிறது?

"மருந்து தயாரிப்புத் துறையானது அரசு வசம்தான் இருக்க வேண்டும். ஒருபோதும் தனியார்வசம் சென்றுவிடக் கூடாது என்று நான் உறுதிபட நினைக்கிறேன்.''

- **ஜவாஹர்லால் நேரு.**

ஐடிபிஎல் எனப்படும் இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட் நிறுவனத் திறப்பு விழா மலரின் முகப்புப் பக்கத்தில் இடம்பெற்றுள்ள வாசகம்தான் நீங்கள் மேலே படித்தது. நோய் தீர்க்கும் மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் அரசு வசம்தான் இருக்க வேண்டும் என்ற தீர்க்க தரிசனத்தோடு தொடங் கப்பட்ட மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இன்று விற்பனைக்கு வந்துள்ளன.

உலக அளவில் மருந்து தயாரிப்பில் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது. இத்துறையின் ஆண்டு வருமானம் 4,500 கோடி டாலராக உள்ளது. இந்தியாவில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் பல்க் டிரக்ஸ் எனப்படும் மூலக்கூறு மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் 250 மட்டுமே. இவைதான் மொத்த சந்தையில் 70 சதவீதத்தை தங்கள் வசம் வைத்துள்ளன. இவற்றில் 5 மட்டுமே பொதுத்துறை நிறுவனங்களாகும்.

1970 களின் தொடக்கத்தில் இந்திய மருந்து சந்தையில் 70 சதவீத சந்தையை வெளிநாட்டு நிறுவனங்கள் பிடித்திருந்தன. இது தற்போது 30 சதவீதமாகக் குறைந்துள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தைக் குறைத்ததில் அரசு நிறுவனங்களுக்குப் பெரும் பங்கு இருந்தது.

கடந்த மாதம் பிரதமர் நரேந்திர மோடி தலைமை யில் கூடிய அமைச்சரவைக் குழு மொத்தம் உள்ள 5 அரசு மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் நான்கு நிறுவனங்களை மூடிவிட ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் தப்பியது கர்நாடக ஆன்டிபயாடிக்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் நிறுவனம் மட்டுமே. மூடி விடுவது என முடிவு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்களில் ஒன்று ஐடிபிஎல், மற்றொன்று ராஜஸ்தான் டிரக்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் நிறுவனமாகும். ஹிந்துஸ்தான் ஆன்டிபயாடிக்ஸ் மற்றும் பெங்கால் கெமிக்கல்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் நிறுவனங்கள் மட்டும் உரிய முதலீட்டாளரை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன.

**ஐடிபிஎல்**

1961-ம் ஆண்டு உயிர் காக்கும் மருந்துப் பொருள் தயாரிப்பில் இந்தியா சுய சார்பு நிலையை எட்ட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட் (ஐடிபிஎல்) நிறுவனம். சோவியத் யூனியனின் ஒத்துழைப் போடு இந்நிறுவனத்தின் முதலாவது ஆலை ஹைதராபாதில் உருவாக்கப்பட்டது. 1979-ம் ஆண்டு இந்நிறுவனம் லாபம் ஈட்டியது. அதற்குப் பிறகு இறங்குமுகம்தான். 2013-14-ம் நிதி ஆண்டில் இந்நிறுவனத்தின் நஷ்டம் ரூ.171 கோடியாகும். விற்பனை வருமானம் ரூ. 60 கோடியாகும். இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம், தொழுநோய் ஒழிப்பு, காச நோய் ஒழிப்பில் ஐடிபிஎல்-லின் பங்கு அளப்பரியது.

**ஆர்டிபிஎல்**

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை சப்ளை செய்வதில் ராஜஸ்தான் டிரக்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் நிறுவனத் துக்கு முக்கிய பங்குண்டு. 1979-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் 2013-14-ம் நிதி ஆண்டில் சந்தித்த நஷ்டம் ரூ. 19 கோடி. மொத்த வருமானம் ரூ. 43 கோடியாகும்.

**பிசிபிஎல்**

இந்திய வேதியியலின் தந்தை என போற்றப்படும் ஆச்சார்ய பிரபுல்ல சந்திர ராய் என்பவரால் 1901-ம் ஆண்டு தொடங்கப்பட்ட பெங்கால் கெமிக்கல்ஸ் அண்ட் பார்ம




சூடிகல்ஸ் நிறுவனம் 1980-ம் ஆண்டு அரசுடமையாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தயாரிப்புகளில் சில `ஸ்வாச் பாரத்' திட்டத்துக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்நிறுவனம் பல ஆன்டிபயாடிக் மருந்துகளைத் தயாரித்தாலும், இன்றளவும் வீடுகளில் பிரபலமாகத் திகழும் காந்தர்டைன் கூந்தல் தைலம் இந்நிறுவன புகழ் பாடும். அதேபோல வயிற்றுவலி காரர்களுக்கு என்றென்றும் நிவாரணியாகத் திகழ்ந்த அக்வா டைகோடிஸ் மருந்துக்கு நிகர் வேறெதுவு மில்லை. இயற்கை பொருள்களான ஓமம் எண்ணெயில் தயாரிக்கப்பட்ட இந்த வயிற்றுவலி நிவாரணி அனைத்து வீடுகளிலும் எல்லா காலகட்டத்திலும் இருப்பில் இருக்கும் மருந்தாகத் திகழ்ந்தது.

சமீபகாலமாக பெங்கால் கெமிக்கல்ஸ் நிறுவனம் சரிவிலிருந்து மீண்டு வந்துள்ளது. 2015-16-ம் நிதி ஆண்டில் இந்நிறுவனத் தயாரிப்பு விற்பனை 5 மடங்கு அதிகரித்து ரூ. 88 கோடியைத் தொட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் இந்நிறுவனம் ரூ. 4 கோடி முதல் ரூ. 5 கோடி வரை லாபம் ஈட்டும் என்று நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சந்திரய்யா தெரிவித்துள்ளார்.

மிகச் சிறந்த நிதி நிர்வாகம் காரணமாக விரைவிலேயே லாபப் பாதைக்கு திரும்பும் என்ற நம்பிக்கைக் கீற்று உருவாகியுள்ளது. நிதி வசதி கொண்ட நிறுவனம் இதை ஏற்று நடத்த முன்வந்தால் நிச்சயம் லாபம் ஈட்டும் என உறுதிபடக் கூறுகிறார் சந்திரய்யா.

**ஹெச்ஏஎல்**

ஹிந்துஸ்தான் ஆன்டிபயாடிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்) உலக சுகாதார நிறுவனம் (டபிள்யூஹெச்ஓ) மற்றும் சர்வதேச ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் கல்வி நிதியம் ஆகியவற் றின் ஒத்துழைப்போடு 1954-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனத்துக்கு ரிஷிகேஷ் மற்றும் ஹைதராபாதில் ஆலைகள் உள்ளன. இந்நிறுவனத்தின் துணை நிறுவனங்களுக்கு இரண்டு ஆலைகள் சென்னை மற்றும் முஸாபர்பூரில் உள்ளன.

இந்நிறுவனம்தான் முதன் முதலில் இந்தியாவில் நோய் எதிர்ப்பு மருந்துகளை ஆன்டிபயாடிக்ஸ் தயாரிக்கும் நிறுவனமாகத்

திகழ்ந்தது. புனேயை ஆடுத்துள்ள பிம்பிரியில் அமைந்துள்ள இந்நிறுவன ஆலையில்தான் பென்சிலின் தயாரிக்கப்பட்டது.

2014 மற்றும் 2015 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் உற்பத்தி முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. மொத்த வர்த்தகம் ரூ. 14 கோடி. நஷ்டம் ரூ. 75 கோடியாக உயர்ந்தது. இந்நிறுவனத்தை சீரமைக்கும் பணிகள் தோல்வியடைந்தன. இப்போது இரண்டாம் கட்ட சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### ஏன் இந்த நிலை?

மருத்துவத்துக்கு ஒதுக்கீடு செய்யும் நாடுகளில் மிகக் குறைவான ஒதுக்கீட்டைச் செய்யும் நாடு இந்தியா. மேலும் இவை ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றன. அரசு மருந்து தயாரிப்பு நிறுவனங்களை வெற்றிகரமாக செயல்படுத்த உரிய கொள்கையை அரசு வகுக்கவில்லை. நவீன காலத்துக்கேற்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை இவை மேற்கொள்ள வில்லை.

பொதுத்துறை நிறுவனத் தலைவர்கள் எந்த ஒரு முடிவுக்கும் அரசை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும். சுதந்திரமாக முடிவு எடுக்க முடியாத நிலை. மருந்து தயாரிப்புக்கு காப்புரிமை அவசியம். அல்லது காப்புரிமை தேவைப் படாத மருந்துகளைக் கண்டறிந்து அவற்றை தயாரிக்கலாம். இவை இரண்டுக்கும் அரசின் அனுமதியை எதிர்பார்த்தே காத்திருக்க வேண்டிய அவலம்.

இந்நிறுவனத் தலைவர்களால் முடிவுகள் எடுக்க முடியாதது முக்கியக் காரணம். அனைத்துக்கும் மேலாக நிறுவனத்தை நவீனமயமாக்குவதற்குத் தேவையான முதலீட்டை அரசு செய்யவில்லை. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அரசு மருந்து தயாரிப்பு நிறுவனங்களை கோமா நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளன. ஐடிபிஎல் நிறுவனத்துக்கு சொந்தமாக 2 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது.

இதேபோல பிற பொதுத்துறை நிறுவனங் களுக்குச் சொந்தமான நிலங்களை விற்று அதன் மூலம் இவற்றை மறு சீரமைப்பு செய்யலாம் என்ற கருத்தும் உள்ளது. மருந்துப் பொருள்கள் தயாரிப் பில் மூலப் பொருள் மிகவும் முக்கியமாகும். பல்க் டிரக்ஸ் எனப்படும் இத்தகைய மூலப் பொருள்கள் பெரும்பாலும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவிலேயே மருந்துக்கான மூலப் பொருளை தயாரித்து, இறக்குமதியை மூன்று ஆண்டுகளுக்குள் முற்றிலுமாக நிறுத்திவிட 2015-ல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இன்றளவிலும் மூல மருந்துப் பொருள்கள் சீனாவிலிருந்துதான் இறக்குமதியாகின்றன.

### பிரதம மந்திரி ஜன் ஔஷதி திட்டம்

ஏழை எளியவர்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைப்பதற்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம்தான் இது. மிகக் குறைந்த விலையில் மருந்துகளை விற்பனை செய்யும் விற்பனையகம்தான் ஜன் ஔஷதி. நகர்ப்புறங்கள் மட்டுமின்றி, கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு மருந்து குறைந்த விலையில் கிடைப்பதற்காக இத்தகைய மருந்தகங்களை தொடங்க மத்திய அரசு ஊக்குவிக்கிறது. இதன்படி கடந்த ஆண்டு பட்ஜெட்டில் 3 ஆயிரம் மருந்து விற்பனை யகங்களைத் தொடங்க திட்டமிட்டுள்ள தாக நிதி அமைச்சர் ஜேட்லி அறிவித்தார். ஆனால் இவை இன்னும் முழுமையாக செயல்பட வில்லை.

பொதுத்துறை மருந்து தயாரிப்பு நிறுவனங் களை தனியாருக்கு தாரைவார்த்துவிட்டு பிறகு கட்டுபடியாகும் விலையில் மருந்துகளை ஜன் ஔஷதி மருந்து விற்பனையகங்களுக்கு எவ்விதம் தர முடியும்? மக்களுக்கு குறைந்த விலையில் மருந்து எப்படிக் கிடைக்கும்?

மருந்து விற்பனையகம் வைத்திருப்பவர்கூட லாபம் ஈட்டும்போது மருந்து தயாரிக்கும் அரசு நிறுவனங்கள் நஷ்டத்தில் உழல வேண்டியதன் காரணம் என்ன? மருந்து தயாரிப்பு நிறுவனங் களையே நோய் தாக்கினால் அதற்கு யார் மருந்து தருவது?

நன்றி :
தி இந்து தமிழ், 30.1.2017

# காளை படுத்தால் கழுதை மட்டம்!

கடல் நிறைய நீர் இருக்க
தாகத்தில் மீனவனும்,
வயல் நிறைய நெல் இருக்க
பசியுடன் விவசாயியும்,
பொம்மைகள் ஆடை கட்ட
கோவணத்தில் நெசவாளியும்,
உணவகத்தில் ஈ மொய்க்க
ஏக்கத்தில் பரிமாறுபவனும்,
மாளிகைகள் காலியாக
கட்டியவன் சாலையிலும்,
தொகுப்பறியாக் கவிதைகள்
காகிதங்களில் கப்பல் விட,
உடல் முழுக்க ரத்தம் ஓட
வெளிறிப் போன இதயமும்,

வான் நிறைய விண்மீன் மின்ன
அமாவாசை இருளிலும்,
வீடு முழுக்க வாசல் திறக்க
வாடி வாசல்கள் மூடியும்,
நிறைவுகள் காலியாகவும்,
நினைவுகள் மறதியாகவும்,
உறவுகள் முறிவுகளாகவும்,
வளைந்த கொம்புகளில்
வளையாத சட்டங்கள்!

மூக்குக் கயிறுகள்
தூக்குக் கயிறுகளாய்
தராசின் தட்டுக்களில்....
சட்டங்கள் அலமாரியிலும்...
வாதங்கள் பேதங்களாகவும்...
தீர்ப்புகள் காகிதங்களிலும்
உறங்குகின்றன....!

சிலைகள் திருடும் கூட்டத்தில்
கடவுள் காணாமல் போக...
கலைகள் திருடும் கூட்டத்தில்
கலாச்சாரம் என்ன செய்ய...?

சட்டத்தின் ஓட்டைகள்
பெரிதாகிப் போனதால்
வாயில்கள் தூர்ந்து போயின...!
சில சமயம்
ஓட்டைகளே வாயில்களாய்..
வாயில்களோ சாளரமாய்....
ஓட்டையில் யானைகள்
நுழைந்தாலும்
காளைகள் ஏனோ
காலொடிந்து போகின்றன...

எருமையின் முதுகில்
சவாரி செய்த காகங்கள்
இடம் மாறி
காளைகளின் திமிலிலும்...

கோயிலுக்கு நேர்ந்து விட்ட
காளைகள்
பிடிப்பதற்கு யாருமற்றும்....
வளர்ப்பதற்கு வீடுமற்றும்
கட்டுவதற்கு தொழுவமற்றும்
அனாதைகளாய்த் தெருவில்....!

யானை படுத்தால்
குதிரை மட்டமென்று...
குவலயம் கூற...
காளை படுத்தால்
கழுதை மட்டமென
பன்றி கூறுகிறது...!

- **காரைக்குடி சாதிக்**

**இரத்த தானம்**
**செய்வோம்!**
**உயிர்களைக்**
**காப்போம்!!**

### பணமதிப்பு இழப்பு நடவடிக்கைக்குழு சார்பில்

# மனித சங்கிலி போராட்டம்

1. மக்கள் சொந்தப் பணத்த எடுக்க எந்த கட்டுபாடுகளும் கூடாது.

2. காசற்ற பொருளாதாரத்தில் மக்களை கட்டாயப்படுத்தி தள்ளாதே.

3. கறுப்புப் பணத்தை கைப்பற்ற உறுதியான நடவடிக்கை எடு.

4. விவசாய வேலைகள் முடங்கியிருப்பதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் கடன்களை ரத்து செய்.

5. கிராமப்புற 100 நாள் வேலைத் திட்ட ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக்கு.

6. செல்லாப்பண நடவடிக்கையால் உயிரிழந்துள்ள மக்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்கு.

7. பாதிக்கப்பட்டுள்ள சிறு, நடுத்தர தொழில்களுக்கு வரிச் சலுகை வழங்கு.

8. கூட்டுறவு வங்கிகள் மீதான அதீதக் கட்டுப்பாடுகளை தளர்த்து.

9. மாநில அரசுகளுக்கு ஆகிற கூடுதல் செலவினத்தை ஈடுகட்டு.

10. வேலை இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கு.

11. ஆதார் இணைப்பைக் கட்டாயமாக்கி ரேசன் வழங்குவதை நிறுத்தாதே.

ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 31.01.17 அன்று மாலை மனித சங்கிலி போராட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக...

**வட, தென் சென்னை**

சென்னை பல்லவன் இல்லம் அருகே நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர். அரசு ஊழியர் சங்கத்தின் வடசென்னை, தென்சென்னை மாவட்டக் குழுக்கள் சார்பில் ஊழியர்கள் பங்கேற்றனர்.

**நாகப்பட்டினம்**

நாகப்பட்டினம் நீதிமன்ற வளாகத்திலிருந்து மனிதச் சங்கிலி இயக்கம் நாகை மாவட்ட பணமதிப்பு இழப்பு நடவடிக்கைக் குழு சார்பில் நடைபெற்றது. இந்திய தொழிற்சங்க மையம், அரசு ஊழியர் சங்கம், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, ஓய்வூதியர் சங்கம், ஓய்வுபெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் சங்கம், வங்கி ஊழியர் சங்கம், ஆயுள் காப்பீட்டு கழக ஊழியர் சங்கம், விவசாயிகள் சங்கம், விவசாய தொழிலாளர் சங்கம், ஜனநாயக வாலிபர் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கத்திலிருந்து 500 க்கும் மேற்பட்டோர் மனித சங்கிலியில் பங்கேற்றனர். இதே கோரிக்கைகளை வலியுறுத்தி மயிலாடுதுறை கச்சேரி சாலையில் மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது. ❖

## பணி ஓய்வு - பாராட்டு விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உருவாக்கிய தலைவர்களில் ஒருவரும் கரூர் மாவட்ட முன்னாள் செயலாளருமான எஸ்.விஜயராகவன் பணி ஓய்வு பாராட்டு விழா மாவட்ட தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் கே.சக்திவேல் வரவேற்புரையாற்றினார். ஜி.ஜீவானந்தம், வி.மோகன்குமார் கே.எஸ்.பிச்சுமணி, என்சந்திரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.



# அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

*அனுப்புநர்*

*பொது தகவல் அலுவலர்*
*அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்,*
*சென்னை - 600 025.*

*பெறுநர்*

*பி.பிரெடெரிக் ஏங்கெல்ஸ்,*
*155, சாய்ராம் நகர்,*
*எரியோடு அஞ்சல்,*
*வேடசந்தூர் வட்டம்,*
*திண்டுக்கல் மாவட்டம் - 624 702.*

*ந.க.எண்.* 104/RTI/M/2016, *நாள் : 10.01.2017*

*அய்யா,*

*பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - சில தகவல்கள் கோரியது - பதில் அனுப்புதல் - சார்பு.*

*பார்வை : தங்களது விண்ணப்பம், நாள் 24.12.2016.*
*இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் 26.12.2016*

★★★

*பார்வையில் காணும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் பெறப்பட்ட விண்ணப்பத்தில் கோரப்பட்ட விவரங்களுக்கு கீழ்க்காணும் தகவல்கள் வழங்கப்படுகிறது.*

*தகவல் 1 :*

*01.04.2003க்கு பிறகு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் பணியேற்ற மொத்த பணியாளர்களிடமிருந்து (2015-16) நிதியாண்டு வரை பிடித்தம் செய்யப்பட்ட மொத்த பங்களிப்புத் தொகை ரூ.5,111,42,98,616/-ஆகும்.*

*தகவல் 2 :*

*01.04.2003க்கு பிறகு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுநாள் வரை பணியேற்ற மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 4,54,999 ஆகும்.*

*தகவல் 3 :*

*பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் (2015-16) நிதியாண்டு வரை தமிழக அரசு செலுத்திய அரசின் மொத்த பங்களிப்புத் தொகை ரூ.5,111,42,98,616/- ஆகும்.*

*தகவல் 4 :*

*தகவல் நகலாக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.*

பொது தகவல் அலுவலர்.

*இணைப்பு : பங்களிப்பு ஓய்வூதிய திட்ட வட்டி*
*தொகை விபர நகல் ஆண்டு வாரியாக*

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு ஓய்வுபெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் சங்கம்

நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் 24.01.17 மாலை நாகை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 20 அம்சக் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் எம்.என்.பக்கிரிசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கணேசன் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் வி.பாலசுப்பிரமணியன் விளக்கவுரையாற்றினார்.

வேதாரண்யம் வட்டாரத் தலைவர் இராம.இளங்கோவன், செயலாளர் பாப்பு இராமநாதன், நாகை வட்டாரத் தலைவர் வி.ஜெயசீலன், வட்டாரச் செயலாளர் டி.கலியபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, ஓய்வு பெற்ற பி.எஸ்.என்.எல் ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் பி.செல்வராஜ், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.காந்தி, அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாகை தொழிற்சசங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பி.காத்தமுத்து நன்றி கூறினார்.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், இருபது ஆண்டு பணி முடித்தோருக்கு முழு ஓய்வூதியம் வழங்க வேண்டும், மருத்துவப்படி ரூ.1000/= வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## தமிழகம் முழுவதும் பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கம்

சங்கத்தின் சார்பாக 19 கிளைகளில், உயர் அதிகாரிகளின் அதிகார அத்துமீறலை கண்டித்தும், தொழிலாளர்களுக்கு நிரந்தரம், இளநிலை, முதுநிலை ஊழியர் ஊதியமுரண்பாடு நிலுவை காசாக்கி வழங்கிட வலியுறுத்தியும் நடைபெற்ற கவனஈர்ப்பு போராட்டத்தின் ஒரு பகுதியாக ஓசூரில் கிளை தலைவர் எஸ்.சக்திவேல் தலைமையேற்க, த.நா. அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் பி.சந்திரன் வாழ்த்தி பேசினார். பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்க மாநில பொருளாளர் சி.பி.ஜெயராமன், மாநில துணைத் தலைவர் ஆர் .நடராஜன் ஆகியோர் சிற்புறையாற்றினர். கிளைச் செயலாளர் வி.முனிராஜ் விளக்கவுரையாற்றினார். மா.செ.உ.கண்ணாமணி நன்றி கூறினார்.

## தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

வறட்சி நிவாரண கணக்கெடுப்பிற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்க வேண்டும், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் துணை ஆட்சியர் பதவி உயர்வு உடனடியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் 31.01.17 மாலை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் ப்பி.விஜயன் தலைமையில் மாபெரும் தர்ணா போராட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எம்.தமிமுன்



அன்சாரி முன்னிலை வகித்தார். மத்திய செயற்குழு உறுப்பினர் து.விஜயராகவன் விளக்கவுரையாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் துவக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் மற்றும் மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநிலச் செயலாளர் எல்.பிரேம்சந்தர் நிறைவுரையாற்றினார்.

❖